





PRGI No. TNBIL/25/A1569

வைகறையில்
# பேப்பர்பாய்
www.paperboy.biz
VAIGARAIYIL PAPERBOY








சென்னை மலர்: 01 இதழ்: 214 17.03.2026 செவ்வாய்க்கிழமை

Chennai | Volume: 01 | Issue: 214 | Tuesday | pages 8 | Rs.5/-

DISTRIBUTED ACROSS TAMILNADU AND PUDUCHERRY


# தேர்தல் கண்காணிப்பு நடவடிக்கை
# பறக்கும் படை வாகனங்களின் செயல்பாடு தொடக்கம்

**சென்னை, மார்ச் 17:**

சென்னை மாவட்ட தேர்தல் அலுவலர்/மாநகராட்சி ஆணையாளர் ஜெ.குமரகுருபரன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது;-

"இந்திய தேர்தல் ஆணையத்தால், இன்று (15.03.2026) தமிழ்நாடு சட்டமன்றப் பொது தேர்தல் - 2026ற்கான தேர்தல் அட்டவணை வெளியிட்டு அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. இதனையொட்டி, தேர்தல் நடத்தை நெறிமுறைகள் உடனடியாக அமுலுக்கு வரப்பெற்றுள்ளது.

இதனை முன்னிட்டு, சென்னை மாவட்டத்தில் உள்ள 16 சட்டமன்றத் தொகுதிகளுக்கான பறக்கும் படை, நிலையான கண்காணிப்பு குழு வீடியோ, கண்காணிப்பு குழு ஆகியவற்றிற்கான 128 வாகனங்கள் பெருநகர சென்னை மாநகராட்சி ரிப்பன் கட்டிட வளாகத்திலிருந்து புறப்பட்டு தனது பணியைத் தொடங்கியது.

தேர்தல் பணியின் ஒரு பகுதியாக, சென்னை மாவட்டத்தில் இன்று உடனடியாக கண்காணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. சென்னை மாவட்டத்தில் உள்ள 16 சட்டமன்றத் தொகுதிகளான டாக்டர்.இராதாகிருஷ்ணன் நகர், பெரம்பூர், கொளத்தூர், வில்லிவாக்கம், திரு.வி.க. நகர் (தனி), எழும்பூர் (தனி), இராயபுரம், துறைமுகம், சேப்பாக்கம் திருவல்லிக்கேணி, ஆயிரம் விளக்கு, அண்ணா நகர், விருகம்பாக்கம்,சைதாப்பேட்டை, தியாகராயநகர், மயிலாப்பூர், வேளச்சேரி ஆகியவற்றில் ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதிக்கும் தலா 3 பறக்கும் படை, 3 நிலையான கண்காணிப்புக் குழு, 2 வீடியோ கண்காணிப்புக் குழு என ஒவ்வொரு தொகுதிக்கும் 8 வாகனங்கள் வீதம் 16 தொகுதிகளிலும் 128 வாகனங்கள் இன்று முதல் செயல்படத் தொடங்கியுள்ளன.



பறக்கும் படை மற்றும் நிலையான கண்காணிப்புக் குழு தினசரி 3 சுழற்சி முறையிலும், வீடியோ கண்காணிப்புக் குழு தினசரி 2 சுழற்சி முறையிலும் தனது பணியினை மேற்கொள்ளும். பறக்கும் படை மற்றும் நிலையான கண்காணிப்புக் குழுவின் ஒவ்வொரு வாகனத்திலும் நிர்வாக நடுவர் நிலையில் உள்ள ஒரு அலுவலர் தலைமையில் உதவி காவல் ஆய்வாளர், காவலர், ஆயுதம் தாங்கிய காவலர் மற்றும் ஒரு வீடியோகிராபர் இருப்பார்கள். வீடியோ கண்காணிப்புக் குழுவில் நிர்வாக நடுவர் நிலை அலுவலர் மற்றும் வீடியோ கிராபர் இருப்பார்கள்.

தேர்தல் நடத்தை விதிமுறைகளை மீறுதல் தொடர்பான அனைத்து புகார்கள்;(ஆ) அச்சுறுத்தல், மிரட்டல், சமூக விரோத கூறுகளின் இயக்கம், மதுபானம், ஆயுதங்கள் மற்றும் வெடிமருந்துகள் மற்றும் வாக்காளர்களுக்கு லஞ்சம் கொடுக்கும் நோக்கத்திற்காக பெரும் தொகை போன்ற அனைத்து புகார்கள்; (இ) வேட்பாளர்கள் / அரசியல் கட்சியால் செய்யப்பட்ட அல்லது அங்கீகரிக்கப்பட்ட தேர்தல் செலவுகள் தொடர்பான அனைத்து புகார்கள்: (ஈ) தேர்தல் அறிவிப்பு வெளியான முதல் வீடியோ கண்காணிப்புக் குழு (VST) உதவியுடன் வீடியோகிராஃப், அனைத்து முக்கிய பேரணிகள், பொதுக் கூட்டங்கள் அல்லது அரசியல் கட்சிகளால் செய்யப்பட்ட பிற முக்கிய செலவுகள் அனைத்தையும் கண்காணித்து அறிக்கை அனுப்புதல் பணிகளை மேற்கொள்வார்கள்.

இந்த குழு சட்டவிரோதமான மதுபானம், லஞ்சம் அல்லது பெரிய அளவிலான பணம், ஆயுதங்கள் மற்றும் வெடிமருந்துகள் மற்றும் அவர்களின் பகுதியில் உள்ள சமூக விரோத கூறுகளின் இயக்கம் ஆகியவற்றை கண்காணிப்பர்.

மாவட்ட எல்லை அல்லது வேறு ஏதேனும் இடத்தின் எல்லைகளில் சோதனை சாவடி அமைத்திருந்தாலும், அவற்றிற்கு அருகமையிலேயே உள்ள எல்லையில் S.S.T. குழு தனது பணியினை மேற்கொள்ளும். பணம் அல்லது லஞ்சம் பொருட்கள் S.S.T. குழுவினரால் சோதனை செய்யப்பட்டு உரிய நடவடிக்கைமேற்கொள்ளப்படும்.

ஒற்றைச்சாரள முறையில் (SINGLE WINDOW SYSTEM) அனுமதி பெற்ற பொதுக்கூட்டம் / பிரச்சாரம்/பேரணிகளை வீடியோ பதிவு மேற்கொள்ளும். அனுமதி பெறாத கூட்டங்கள் /வாகனங்கள் /பிரச்சாரங்கள் கண்டறியப்படும் பட்சத்தில் கொடி, தோரணம், பிரச்சார பொருட்கள் குறித்து கட்டுப்பாட்டு அறைக்கு தகவல் தெரிவித்திடும். முழுமையையும் வீடியோ பதிவு செய்யும் பணி மேற்கொள்ளும்.

சென்னை மாவட்ட தேர்தல் தலைமை அலுவலகக் கட்டுப்பாட்டு அறையில் தேர்தல் தொடர்பாக பொதுமக்கள் புகார்கள் அளித்திட கட்டணமில்லா தொலைபேசி எண் 1800 425 7012 அமைக்கப்பட்டுள்ளது. பொதுமக்கள் இந்த எண்ணில் தேர்தல் விதிமீறல்கள் தொடர்பான புகார்களை தெரிவிக்கலாம்."

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சி.பி.ஐ. விசாரணை முடிந்து சென்னை வந்தடைந்தார் த.வெ.க. தலைவர் விஜய்

**சென்னை, மார்ச் 17:**

கரூர் வேலுச்சாமிபுரத்தில் கடந்த ஆண்டு செப்டம்பர் 27-ந்தேதி தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர் விஜய் பங்கேற்ற பிரசார பொதுக்கூட்டத்தில் கூட்ட நெரிசல் ஏற்பட்டது. இதில் குழந்தைகள் உள்பட 41 பேர் உயிரிழந்தனர். இந்த சம்பவம் நாடு முழுவதும் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. கரூர் கூட்ட நெரிசல் வழக்கை சி.பி.ஐ. விசாரித்து வருகிறது.

சம்பவத்துக்கு காரணம், பாதுகாப்பு குறைபாடுகள் என த.வெ.க. தரப்பில் சொல்லப்பட்டதால் காவல்துறை அதிகாரிகளிடம் விசாரணை நடத்தப்பட்டது. த.வெ.க. 2-ம் கட்ட தலைவர்களையும் சி.பி.ஐ. அதிகாரிகள் டெல்லிக்கு வரவழைத்து விசாரித்தனர். இதனைத்தொடர்ந்து, கட்சியின் தலைவரான விஜய்க்கும் 2 முறை சம்மன் அனுப்பப்பட்டு விசாரணை நடத்தப்பட்டது. இதற்கிடையில் கடந்த 10-ந்தேதி(செவ்வாய்க்கிழமை) டெல்லியில் உள்ள சி.பி.ஐ.



தலைமை அலுவலகத்தில் விசாரணைக்கு ஆஜராகுமாறு விஜய்க்கு சம்மன் அனுப்பப்பட்டிருந்தது.

ஆனால் விஜய் தரப்பில், டெல்லிக்கு வருவதில் இருந்து விலக்கு அளிக்குமாறு கேட்கப்பட்டது. தமிழகத்தில் சட்டமன்ற தேர்தல் நெருங்கி வருவதால் அதுகுறித்த பணிகளில் ஈடுபட்டு இருப்பதாகவும், டெல்லிக்கு பதிலாக தமிழ்நாட்டில் உள்ள சி.பி.ஐ. அலுவலகத்தில் விசாரணை நடத்துமாறும் விஜய் தரப்பில் கேட்டுக் கொள்ளப்பட்டது. இதையடுத்து சி.பி.ஐ. அதிகாரிகள் விஜய்யை 15-ந்தேதி விசாரணைக்காக டெல்லிக்கு வருமாறு சம்மன் அனுப்பினர்.

இதன்படி, சி.பி.ஐ. விசாரணைக்காக நேற்றைய தினம் தனி விமானம் மூலம் விஜய் டெல்லி புறப்பட்டு சென்றார். அவருடன் ஆதவ் அர்ஜுனா, நிர்மல்குமார் உள்ளிட்ட த.வெ.க. நிர்வாகிகள் 7 பேர் சென்றனர். டெல்லியில் உள்ள நட்சத்திர ஓட்டலில் தங்கிய விஜய், இன்று(ஞாயிற்றுக்கிழமை) காலை ஓட்டலில் இருந்து புறப்பட்டு, சி.பி.ஐ. அலுவலகத்தில் விசாரணைக்காக ஆஜரானார்.

ஏற்கனவே 2 முறை நடத்தப்பட்ட விசாரணையின்போது கோரப்பட்ட ஆவணங்கள் இந்த விசாரணையின்போது, விஜய் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டது. தொடர்ந்து அவரிடம் சி.பி.ஐ. அதிகாரிகள் விசாரணை மேற்கொண்டனர். காலை 10.30 மணிக்கு தொடங்கிய இந்த விசாரணை மாலை 5.30 மணி வரை நடைபெற்றது. விஜய்யிடம் சி.பி.ஐ. அதிகாரிகள் சுமார் 7 மணி நேரம் விசாரணை நடத்தினர். தேவைப்பட்டால் விசாரணை நாளை(திங்கட்கிழமை) மதியம் வரை நீடிக்கலாம் என்று தகவல்கள் வெளியான நிலையில், இன்று விஜய்யிடம் விசாரணை இல்லை என சி.பி.ஐ. தரப்பில் தெரிவிக்கப்பட்டது. இதையடுத்து இன்றைய தினமே தனி விமானம் மூலம் டெல்லியில் இருந்து புறப்பட்ட விஜய், தற்போது சென்னை விமான நிலையம் வந்தடைந்துள்ளார்.

## தேர்தல் தேதி அறிவிப்பு: அரசாணை வெளியிடுவதில் தமிழக அரசுக்கு கட்டுப்பாடுகள்

**சென்னை, மார்ச் 17:**



தமிழக சட்டசபைக்கு ஏப்ரல் 23-ந் தேதி தேர்தல் நடைபெறும் என்று தலைமை தேர்தல் கமிஷன் நேற்று அதிகாரப்பூர்வமாக அறிவித்தது. இதனையடுத்து தேர்தல் நடத்தை விதிமுறைகள் உடனடியாக அமலுக்கு வந்தது.

இந்த நிலையில், தமிழகத்தில் அறிவிக்கப்பட்ட திட்டங்களுக்கான சில முக்கிய அரசாணைகளை, தேர்தல் தேதியை அறிவித்த பிறகும் வெளியிடுவது, முன்பு வழக்கமாக இருந்தது. ஆனால் இந்த செயல்பாட்டுக்கு எதிராக தேர்தல் கமிஷனில் குற்றம்சாட்டப்பட்டது. எனவே கடந்த சில தேர்தல்களின்போது. அரசு உயர் அதிகாரிகளுக்கு இதற்காக தனி உத்தரவை தேர்தல் கமிஷன் பிறப்பித்து வருகிறது.

அதன்படி, மாநில அரசு செயல்படும் வரை பிறப்பிக்கப்பட்ட அரசாணைகளின் பட்டியலில் கோடு போட வேண்டும். தேர்தல் தேதி அறிவிக்கப்பட்ட பிறகு பிறப்பிக்கப்படும் அரசாணைகளின் விவரங்களை அந்த கோட்டுக்கு பிறகு சேர்க்க வேண்டும் என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டு இருந்தது. தற்போதும் இதற்கான உத்தரவை அரசு உயர் அதிகாரிகளுக்கு தேர்தல் கமிஷன் பிறப்பித்திருக்கிறது. மேலும், அரசாணை பிறப்பிப்பதற்கு முன்பு தலைமை தேர்தல் அதிகாரியை அணுகி ஆலோசிக்க வேண்டும் என்றும் அதில் கூறப்பட்டுள்ளது.

## ஒடிசா மருத்துவமனையில் பயங்கர தீ விபத்து - 10 பேர் உயிரிழப்பு

**புவனேஸ்வர், மார்ச் 17:**

ஒடிசா மாநிலம் கட்டாக் நகரில் உள்ள அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் இன்று அதிகாலையில் ஏற்பட்ட பயங்கர தீ விபத்தில் 10 பேர் உயிரிழந்த சம்பவம் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

முன்னதாக இன்று அதிகாலை 3 மணியளவில் மருத்துவமனையில் உள்ள தீவிர சிகிச்சை பிரிவில் திடீரென தீ விபத்து ஏற்பட்டது. இதையடுத்து உடனடியாக தீயணைப்பு வாகனங்கள் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்து தீயை அணைக்கும் முயற்சியில் ஈடுபட்டன. தீ விபத்து ஏற்பட்ட பகுதியில் சிகிச்சை பெற்று வந்த 23




நோயாளிகள் உடனடியாக வேறு அறைக்கு மாற்றப்பட்டனர். அவர்களில் 10 பேர் காயங்களால் உயிரிழந்தனர்.

மேலும் நோயாளிகளை மீட்கும் முயற்சியில் ஈடுபட்ட மருத்துவமனை ஊழியர்கள் உள்ளிட்ட 11-க்கும் மேற்பட்டவர்கள் இந்த விபத்தில் காயமடைந்தனர். தீ விபத்து குறித்து கேள்விப்பட்ட ஒடிசா மாநில முதல்-மந்திரி மோகன் சரண் மாஜி, சுகாதார மந்திரி முகேஷ் மஹாலிங்குடன் உடனடியாக மருத்துவமனைக்கு நேரில் சென்று ஆய்வு செய்தார்.

தீ விபத்தில் காயமடைந்து சிகிச்சை பெற்று வருபவர்களை பார்வையிட்ட மோகன் சரண் அவர்களுக்கு முறையான சிகிச்சை அளிக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார். மேலும் இந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு தலா ரூ.25 லட்சம் இழப்பீடு வழங்கப்படும் என்று அறிவித்துள்ள மோகன் சரண் மாஜி, விபத்து குறித்து விசாரணை நடத்தப்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

### இன்றைய நாள்

செவ்வாய்க்கிழமை
(17-03-2026)
விசுவாவசு ஆண்டு, பங்குனி-3
பிறை: தேய்பிறை
திதி
திரயோதசி காலை 8.57 வரை பிறகு சதுர்த்தசி.
நட்சத்திரம்:
சதயம் நாளை காலை 6.08 வரை பிறகு பூரட்டாதி.
யோகம்
மரணயோகம்
ராகுகாலம்
பிற்பகல் 3.00 – 4.30 மணி
எமகண்டம்
காலை 9.00 – 10.30 மணி.
சூலம் – வடக்கு
நல்ல நேரம் :
காலை 8–9 மணி.
மாலை 5–6 மணி

| | |
|---|---|
| மேஷம் | விருத்தி |
| ரிஷபம் | நலம் |
| மிதுனம் | நட்பு |
| கடகம் | ஓய்வு |
| சிம்மம் | லாபம் |
| கன்னி | நட்பு |
| துலாம் | நன்மை |
| விருச்சிகம் | பக்தி |
| தனுசு | வெற்றி |
| மகரம் | சோர்வு |
| கும்பம் | களிப்பு |
| மீனம் | போட்டி |

## துபாய் ஏர்போர்ட் அருகே தாக்குதல்: மீண்டும் சென்னைக்கே திரும்பிய எமிரேட்ஸ் விமானம்



**சென்னை, மார்ச் 17:**

துபாய் எண்ணெய் கிடங்கு அருகே ஈரான் நடத்திய டிரோன் தாக்குதல் காரணமாக, சென்னையிலிருந்து இன்று அதிகாலை துபாய் புறப்பட்டுச் சென்ற 'எமிரேட்ஸ் ஏர்லைன்ஸ்' பயணிகள் விமானம் மீண்டும் சென்னை விமான நிலையத்தில் தரையிறக்கப்பட்டது. சென்னை சர்வதேச விமான நிலையத்திற்கு இன்று அதிகாலை 2.15 மணிக்கு துபாயிலிருந்து 242 பயணிகளுடன் எமிரேட்ஸ் ஏர்லைன்ஸ் விமானம் வந்தது

பின்னர், மீண்டும் சுமார் 200 பயணிகளை ஏற்றிக்கொண்டு, அந்த விமானம் அதிகாலை 4 மணிக்கு சென்னையில் இருந்து துபாய் நோக்கி புறப்பட்டுச் சென்றது. குஜராத் கடல் எல்லைக்கு மேல் விமானம் பறந்து கொண்டிருந்த போது, துபாயில் மீண்டும் ஏவுகணை தாக்குதல் நடப்பதாகவும், இதனால் வான்வெளி தற்காலிகமாக மூடப்படுவதாகவும் விமானிக்கு தகவல் கிடைத்ததாக கூறப்படுகிறது.

இதையடுத்து, எமிரேட்ஸ் ஏர்லைன்ஸ் பயணிகள் விமானம் இன்று காலை 8.20 மணியளவில் மீண்டும் சென்னைக்கு திரும்பி வந்து தரையிறங்கியது. பயணிகள் அனைவரும் தற்போது விமானத்திற்குள்ளேயே அமர வைக்கப்பட்டுள்ளனர். இன்று அபுதாபி செல்லவிருந்த எத்தியாட் மற்றும் இண்டிகோ விமானங்களும் ரத்து செய்யப்பட்டுள்ளன.



# தமிழகத்தில் ஆண்களை விட பெண் வாக்காளர்களே அதிகம்!



**சென்னை, மார்ச் 17:** தமிழகத்தின் 16-வது சட்டப்பேரவையின் பதவிக்காலம் வரும் மே 10ம் தேதி முடிவடைகிறது. இந்நிலையில் 17-வது சட்டப்பேரவைக்கான தேர்தல் தேதியை இந்திய தேர்தல் ஆணையம் நேற்று அறிவித்தது. டெல்லி தேர்தல் ஆணைய அலுவலகத்தில், தலைமை தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் அறிவித்தார். அதன்படி வரும் ஏப்ரல் 23ம் தேதி, தமிழகத்தின் 234 தொகுதிகளிலும் ஒரே கட்டமாக தேர்தல் நடைபெறுகிறது.

**வியாழன் தேர்தல்! திங்கள் ரிசல்ட்!**

தமிழ்நாட்டில் ஏப்ரல் 23 வியாழக்கிழமை வாக்குப்பதிவு நடைபெறவுள்ளது. வாக்குப்பதிவு முடிந்து 10 நாட்கள் கழித்து மே 4-ம் தேதி திங்கட்கிழமை வாக்கு எண்ணிக்கை நடத்தப்பட்டு முடிவு அறிவிக்கப்படவுள்ளது.

**வேட்புமனு விவரம் :**

தமிழகத்தில் வேட்பு மனுதாக்கல் மார்ச் 30-ம் தேதி தொடங்குகிறது. ஏப்ரல் 6-ம் தேதி மனுதாக்கல் நிறைவடைகிறது. ஏப்ரல் 7-ம் தேதி வேட்புமனு பரிசீலனை நடைபெறுகிறது. வேட்புமனுவை திரும்பபெற ஏப்ரல் 9 இறுதிநாள்.

**ஆண்களை விட பெண்களே அதிகம்!**

தமிழகத்தில் மொத்தம் 5.67 கோடி வாக்காளர்கள் உள்ள நிலையில், அதில் ஆண்களை விட பெண் வாக்காளர்களின் எண்ணிக்கை அதிகம். ஆண் வாக்காளர்கள் எண்ணிக்கை 2.77 கோடியாக உள்ள நிலையில், பெண் வாக்காளர்களின் எண்ணிக்கை 2.90 கோடியாக உள்ளது.

**தமிழ்நாட்டில் 75,032 வாக்குச்சாவடிகள்!**

தமிழ்நாட்டில் 75,032 வாக்குச்சாவடிகள் அமைக்கப்படவுள்ளதாகவும், அதில், நகர்ப்புறங்களில் 30,967 வாக்குச்சாவடிகளும், கிராமப்புறங்களில் 44,065 வாக்குச்சாவடிகளும் அமைக்கப்படும் என தலைமை தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் தெரிவித்தார்.

# திருமுறை நெறிச் செல்வர் எனும் விருது



திருவாவடுதுறை ஆதீனம் நடத்தும் திருமுறை நேர்முக சிறப்பு வகுப்பில் 2 ஆண்டுகள் பயின்று தேர்ச்சி பெற்றமையை பாராட்டி திருமுறை நெறிச் செல்வர் எனும் விருது போச்சம்பள்ளி தலைமை ஆசிரியர் சிவ. முத்து லட்சுமணன் அவர்களுக்கு திருக்கைலாய பரம்பரை திருவாவடுதுறை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீஅம்பலவாண தேசிக பரமாசாரிய சுவாமிகள் வழங்கிய நிகழ்வு

# டெல்லி வந்து செல்வதில் சிரமம்... சிபிஐயிடம் கோரிக்கை வைத்த விஜய்



**சென்னை, மார்ச் 17:** கரூர் வழக்கு விசாரணைக்கு தமிழ்நாட்டில் உள்ள சிபிஐ அலுவலகத்தில் ஆஜராக அனுமதி வழங்குமாறு விஜய் தரப்பில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

த.வெ.க. தலைவர் விஜய் கடந்த ஆண்டு முதல் தமிழகம் முழுவதும் சுற்றுப்பயணம் மேற்கொண்டு வருகிறார். கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் 27-ந் தேதி அவர் கரூருக்கு சென்றார். அங்கு வாகனத்தின் மேற்கூரையில் நின்று பேசினார். அவரை பார்ப்பதற்காக அங்கு பெருங்கூட்டம் கூடியிருந்தது. இதனால் ஏற்பட்ட நெரிசலில் பெண்கள், குழந்தைகள் உள்பட 41 பேர் பலியானார்கள்.

நாடு முழுவதும் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்திய இந்த சம்பவம் குறித்து முதலில் தமிழக சிறப்பு புலனாய்வுக்குழு விசாரணை நடத்தியது. பின்னர் சுப்ரீம் கோர்ட்டு உத்தரவின் பேரில் இந்த வழக்கை சி.பி.ஐ. விசாரணைக்கு எடுத்தது.

இந்த சம்பவத்துக்கு காரணம் பாதுகாப்பு குறைபாடுகள் என்று தமிழக வெற்றிக்கழகம் தரப்பில் சொல்லப்பட்டதால் போலீஸ் அதிகாரிகளிடமும் விசாரணை நடத்தப்பட்டுள்ளது. மேலும் கரூர் சம்பவம் தொடர்பாக விஜய்யிடமும் சி.பி.ஐ. அதிகாரிகள் விசாரணை நடத்தினார்கள்.

ஏற்கனவே கடந்த ஜனவரி மாதம் 12-ந்தேதி, 2-வது முறையாக ஜனவரி 19-ந்தேதி, 3-வது முறையாக நேற்று விஜய் டெல்லியில் உள்ள சி.பி.ஐ. அலுவலகத்தில் ஆஜரானார். நேற்று விஜய்யிடம் 7 மணி நேரம் விசாரணை நடத்தப்பட்டது.

இந்நிலையில் கரூர் வழக்கு விசாரணைக்கு தமிழ்நாட்டில் உள்ள சிபிஐ அலுவலகத்தில் ஆஜராக அனுமதி வழங்குமாறு விஜய் தரப்பில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தேர்தல் காலம் என்பதால் அடிக்கடி டெல்லி வந்து செல்வதில் சிரமம் இருக்கிறது. டெல்லி சிபிஐ அலுவலகத்தில் நடந்த 3 விசாரணையிலும் சட்டத்திற்கு உட்பட்டு முழு ஒத்துழைப்பு வழங்கி உள்ளதாகவும், வேட்பாளர் தேர்வு, பிரசாரம் என பல்வேறு நிகழ்வுகள் திட்டமிடப்பட்டுள்ளதால் தமிழ்நாட்டில் விசாரணைக்கு ஆஜராவதை சிபிஐ பரிசீலிக்க வேண்டும் என விஜய் தரப்பு கோரிக்கை மனு வழங்கி உள்ளது.

# விளாத்திகுளம் மாணவி கொலை வழக்கில் 5 பேரிடம் DNA பரிசோதனை - மதுரை ஐகோர்ட்டில் அரசு தகவல்



**மதுரை, மார்ச் 17:** தூத்துக்குடி மாவட்டம் ஆ.குமாரபுரத்தை சேர்ந்த வக்கீல் மாரீஸ்வரி, மதுரை ஐகோர்ட்டில் தாக்கல் செய்த மனுவில் கூறியிருந்ததாவது:-

தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம் பகுதியை சேர்ந்தவர் பிளஸ்-2 மாணவி கடந்த 10-ந்தேதி மாயமான நிலையில், 11-ந்தேதி உடலில் படுகாயங்களுடன் சடலமாக மீட்கப்பட்டு உள்ளார். மாணவி கொலை குற்றவாளிகளை உடனடியாக கைது செய்யவும், விசாரணையை முறையாக நடத்தவும் இந்த வழக்கை சி.பி.ஐ.க்கு மாற்றி உத்தரவிட வேண்டும், மாணவியின் குடும்பத்தினருக்கு ரூ.50 லட்சம் இழப்பீடு வழங்கவும், இந்த கொலை வழக்கின் நிலை குறித்து அறிக்கை தாக்கல் செய்ய போலீசாருக்கு உத்தரவிட வேண்டும். இந்த வழக்கு விசாரணையை கண்காணிக்க ஓய்வு பெற்ற ஐகோர்ட்டு நீதிபதியை நியமிக்க வேண்டும்.

இவ்வாறு மனுவில் கூறியிருந்தார். வழக்கை ஏற்கனவே விசாரித்த ஐகோர்ட்டு பிளஸ்-2 மாணவி கொலை சம்பவம் குறித்து அறிவியல் பூர்வமான விசாரணையை நடத்தும்படி போலீசாருக்கு உத்தரவிட்டு இருந்தது. இந்த நிலையில் இந்த வழக்கு நீதிபதிகள் சதீஷ் குமார், ஜோதிராமன் ஆகியோர் முன்பு இன்று விசாரணைக்கு வந்தது. அப்போது கூடுதல் அட்வகேட் ஜெனரல் ஆஜராகி வாதிடுகையில், குற்றவாளிகளை கண்டு பிடிக்கும் வகையில் சந்தேகத்துக்கு இடமான 5 பேரிடம் ரத்த மாதிரி சேகரிக்கப்பட்டு டி.என்.ஏ பரிசோதனைக்கு அனுப்பப்பட்டு உள்ளது என்றார்.

இதற்கிடையே மாணவியின் பெற்றோர் சார்பில் ஆஜரான வக்கீல், மாணவி இறப்பு விவகாரத்தில் போலீசார் மெத்தனமாக செயல்படுவதாக குற்றம் சாட்டினார். அப்போது நீதிபதிகள் இந்த விவகாரத்தை பொருத்த அளவில் காவல்துறைக்கு அழுத்தம் கொடுக்கும் பட்சத்தில் சம்பந்தமில்லாத நபர்களை கைது செய்து விடுவார்கள் என்றனர்.

பின்னர் அனைத்து தரப்பு வாதங்களையும் பதிவு செய்து கொண்ட நீதிபதிகள், இந்த விவகாரத்தில் மாணவியின் பெற்றோர் விசாரணைக்கு முழு ஒத்துழைப்பை வழங்க வேண்டும். அவர்களுடைய வாக்குமூலத்தை வீடியோ, ஆடியோவாக போலீசார் பதிவு செய்ய வேண்டும் என உத்தரவிட்டார். மேலும் மாணவி கொல்லப்பட்ட வழக்கை விசாரிக்க போலீஸ் டி.எஸ்.பி. சுந்தரபாண்டியனை விசாரணை அதிகாரியாக நியமிக்கிறோம். இந்த விசாரணை குறித்த நிலை அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும் தொடர்ந்து மாணவி கொலை வழக்கை இந்த கோர்ட்டு தீவிரமாக கண்காணிக்கும் என்று உத்தரவிட்டு, ஏப்ரல் 2-ம் தேதிக்கு நீதிபதிகள் ஒத்திவைத்தனர்.

# அரசியல் களத்தில் நம் கை ஓங்கி இருக்கிறது- முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்



**சென்னை, மார்ச் 17:** திமுக மாவட்ட செயலாளர்கள் கூட்டத்தில் நேற்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உரையாற்றினார்.

அப்போது அவர் கூறியதாவது:-

தேர்தல் பணியில் திமுக தான் நம்பர் 1 ஆக இருந்து வருகிறது.

அரசியல் களத்தில் நமது கை ஓங்கி இருக்கிறது. நலத் திட்டங்களால் மக்களிடையே பெருகும் ஆதரவு.

200 தொகுதிகளில் வெல்வது இலக்கு என்பதை எண்ணி பணியாற்ற வேண்டும்.

தேர்தல் முடியும் வரை எந்த உட்கட்சி பிரச்சனையும் இருக்கக்கூடாது.

யாராவது தேவையின்றி கட்சிக்குள் குழப்பமோ பிரச்சனையோ உண்டாக்கினால் அவர் எந்த பொறுப்பில் இருந்தாலும் நடவடிக்கை பாயும்.

வேட்பாளர் தேர்வு, யாருக்கு எந்த தொகுதியை ஒதுக்க வேண்டும் என அனைத்தையும் நான் பார்த்துக் கொள்கிறேன்.

தேர்தலில் அதிக வெற்றியை பெற்று தருபவர்களுக்கே அமைச்சர் பதவி வழங்கப்படும்.

தான் மட்டுமின்றி பிறரையும் வெல்ல வைத்து கட்சியின் வெற்றிக்கு உழைப்பவர்களுக்கு உண்டான பரிசு தேர்தலுக்குபின் தேடி வரும். தனிப்பட்ட நிர்வாகிகளை விட கட்சியின் நலன் தான் எனக்கு முக்கியம்.

உறுதியாக வெற்றி பெறும் ஆற்றல் உள்ளவர்களுக்கு மட்டுமே சீட் வழங்கப்படும். தான் மட்டுமின்றி பிறரையும் வெல்ல வைத்து கட்சியின் வெற்றிக்கு உழைப்பவர்களுக்கு உண்டான பரிசு தேர்தலுக்குபின் தேடி வரும்.

இவ்வாறு அவர் கூறினார்.

# பொதுமக்களின் பணம் பறிமுதல் செய்யப்படுமா? - தலைமை தேர்தல் அதிகாரி விளக்கம்



**சென்னை, மார்ச் 17:** தமிழக சட்டசபை தேர்தல் அறிவிக்கப்பட்டதை தொடர்ந்து தேர்தல் விதிமுறைகள் அமலுக்கு வந்துள்ளது. உரிய ஆவணம் இருந்தால் பணம் பறிமுதல் செய்யப்படாது என்று தமிழ்நாடு தலைமை தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் கூறினார்.

தமிழ்நாட்டில் ஒரே கட்டமாக ஏப்ரல் 23-ந்தேதி சட்டசபை தேர்தல் நடக்கிறது. வேட்புமனு தாக்கல் வருகிற 30-ந்தேதி தொடங்கி, அடுத்த மாதம் 6-ந்தேதி வரை நடைபெற உள்ளது. ஓட்டு எண்ணிக்கை மே 4-ந்தேதி நடைபெறும் என்று தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

இந்நிலையில், 2026 சட்டசபை தேர்தல் தொடர்பாக சென்னை தலைமைச் செயலகத்தில் தமிழ்நாடு தலைமை தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவர் கூறியதாவது:

*வாக்காளர்கள் அனைவரும் வாக்களிக்க தகுந்த விழிப்புணர்வு அளிக்கப்படும்.

* 2,106 பறக்கும் படை வீரர்கள் கண்காணிப்பு பணியில் ஈடுபடுவர்.

*வேட்பு மனுத்தாக்கல் செய்ய அனுமதிக்கப்பட்ட 7 நாளில் 5 நாள் தான் மனுத்தாக்கல் செய்ய முடியும். மற்ற 2 நாள் விடுமுறை நாட்கள்.

*உரிய ஆவணம் இருந்தால் பணம் பறிமுதல் செய்யப்படாது. பொதுமக்களுக்கு தொந்தரவு ஏற்படாது.

* நகை வாங்க கொண்டு செல்லப்படும் பணம் உங்களுடையது தான் என்பதை நிரூபிக்க வேண்டும்.

*தமிழ்நாட்டில் 5.67 கோடி வாக்காளர்கள் வாக்களிக்க உள்ளனர்.

இவ்வாறு அவர் கூறினார்.

# ICU-வில் தாய்.. ரூ.1.25 கோடி மருத்துவ செலவு - ரூ.50 லட்சம் கேட்கும் ஏர் ஆம்புலன்ஸ் - துபாயில் தத்தளிக்கும் தமிழர்





**துபாய், மார்ச் 17:** கடந்த 40 நாட்களாக ஐசியுவில் வென்டிலேட்டர் உதவியுடன் சிகிச்சை பெற்று வருகிறார்.

தமிழ்நாட்டைச்சேர்ந்த திலக் குமார் மற்றும் அவரது மனைவி ஷாமினி ரமேஷ் ஆகியோர் கடந்த 8 ஆண்டுகளாக துபாயில் பணியாற்றி வருகின்றனர்.

சமீபத்தில் அவர்களை பார்ப்பதற்காக துபாய் சென்ற திலக் குமாரின் தாயார், அங்கு கடுமையான பாக்டீரியா தொற்றுக்கு உள்ளானார்.

கடந்த 40 நாட்களாக அவர் அங்குள்ள மருத்துவமனையில் ஐசியு பிரிவில் வென்டிலேட்டர் உதவியுடன் சிகிச்சை பெற்று வருகிறார்.

ஒரு நாளைக்கு மட்டும் சுமார் 3 லட்சம் ரூபாய் மருத்துவக் கட்டணமாக வசூலிக்கப்படுகிறது. இதுவரை மொத்தப் மருத்துவ கட்டணம் 1.25 கோடி ரூபாயைத் தாண்டியுள்ளது.

இன்னும் இரண்டு மாதங்களுக்கு வென்டிலேட்டர் சிகிச்சை தேவைப்படும் என மருத்துவர்கள் கூறியுள்ளனர்.

செலவைக் குறைக்கத் தாயாரை இந்தியாவிற்கு அழைத்து வரத் திலக் குமார் திட்டமிட்டார்.

மார்ச் 4-ம் தேதி 7 லட்சம் ரூபாய் செலவில் வணிக ரீதியான மருத்துவ விமானத்தில் செல்ல அனுமதி கிடைத்தது. ஆனால், போர் பதற்றம் காரணமாக அந்த விமானம் ரத்து செய்யப்பட்டது.

தற்போது தனியார் ஏர் ஆம்புலன்ஸ் மட்டுமே ஒரே வழி. போர் பதற்றத்தால் அதன் கட்டணம் 7 மடங்கு உயர்ந்து, 50 லட்சம் ரூபாயாக அதிகரித்துள்ளது. ஆனால் திலக் குமாரால் இவ்வளவு பெரிய தொகையைத் திரட்ட முடியவில்லை.

"நேரம் கடந்து கொண்டே செல்கிறது, எனது தாயை காப்பாற்றத் உதவ வேண்டும்" என்று திலக்குமார் NDTV வாயிலாக கண்ணீருடன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# சி.பி.ஐ. அலுவலகத்தில் இருந்து விஜய் வெளியே வந்த வீடியோவை பகிர்ந்த ஆதவ் அர்ஜுனா





**சென்னை, மார்ச் 17:** விசாரணை முடிந்து சிபிஐ அலுவலகத்தில் இருந்து விஜய் வெளியேறிய வீடியோவைதவெக நிர்வாகி ஆதவ் அர்ஜுனா தனது எக்ஸ் பக்கத்தில் பகிர்ந்துள்ளார்.

தமிழக வெற்றிக்கழக தலைவர் விஜய் கடந்த ஆண்டு முதல் ஒவ்வொரு மாவட்டமாக சென்று தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டு வருகிறார்.

கரூரில் கடந்த ஆண்டு செப்டம்பர் 27-ந்தேதி தமிழக வெற்றிக்கழக தேர்தல் பிரசார கூட்டம் நடைபெற்றது. இதில் கட்சி தலைவர் விஜய் பங்கேற்று பேசினார்.

பொதுமக்கள் மற்றும் தொண்டர்கள் மத்தியில் விஜய் பஸ்சில் நின்றபடி பேசிக்கொண்டிருந்த போது திடீரென்று கூட்ட நெரிசல் ஏற்பட்டது. இந்த நெரிசலில் சிக்கி பெண்கள், குழந்தைகள் உள்ளிட்ட 41 பேர் பலியானார்கள்.

நாடு முழுவதும் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்திய இந்த சம்பவம் குறித்து, சுப்ரீம் கோர்ட்டு உத்தரவின் பேரில் சி.பி.ஐ. விசாரணை நடத்தி வருகிறது. இந்த வழக்கில் தமிழக வெற்றிக்கழகத்தின் முக்கிய நிர்வாகிகளிடம் ஏற்கனவே விசாரணை நடத்தப்பட்டு உள்ளது.

இந்த சம்பவத்துக்கு காரணம் பாதுகாப்பு குறைபாடுகள் என்று தமிழக வெற்றிக்கழகம் தரப்பில் சொல்லப்பட்டதால் போலீஸ் அதிகாரிகளிடமும் விசாரணை நடத்தப்பட்டுள்ளது. மேலும் கரூர் சம்பவம் தொடர்பாக விஜய்யிடமும் சி.பி.ஐ. அதிகாரிகள் விசாரணை நடத்தினார்கள்.

ஏற்கனவே கடந்த ஜனவரி மாதம் 12-ந்தேதி விஜய் டெல்லியில் உள்ள சி.பி.ஐ. தலைமை அலுவலகத்தில் ஆஜரானார். அவரிடம் சி.பி.ஐ. அதிகாரிகள் சுமார் 7 மணி நேரம் விசாரணை நடத்தினார்கள்.

அதன்பிறகு 2-வது முறையாக ஜனவரி 19-ந்தேதி விஜய் மீண்டும் டெல்லியில் உள்ள சி.பி.ஐ. அலுவலகத்தில் ஆஜரானார். அப்போது அவரிடம் சுமார் 6 மணி நேரம் விசாரணை நடத்தப்பட்டது.

இந்நிலையில், நேற்று டெல்லியில் சி.பி.ஐ. தலைமை அலுவலகத்துக்கு விஜய் விசாரணைக்கு ஆஜரானார். அவரிடம் சி.பி.ஐ. அதிகாரிகள் பல்வேறு கேள்விகளை கேட்டனர். விசாரணை முடிந்து மாலை சிபிஐ அலுவலகத்தில் இருந்து விஜய் வெளியேறிய வீடியோ இணையத்தில் வைரலானது.

இந்நிலையில், தவெக நிர்வாகி ஆதவ் அர்ஜுனா அந்த வீடியோவை தனது எக்ஸ் பக்கத்தில் பகிர்ந்துள்ளார். அந்த பதிவில், "டெல்லியில் தொடங்கிய பிரச்சாரம் செயின்ட் ஜார்ஜ் கோட்டையை அடையும் நாள் நெருங்கிவிட்டது.

அதிகாரத்தால் நம்மை முடக்க நினைத்தார்கள், அவதூறுகளால் நம்மை அழிக்க நினைத்தார்கள். ஆனால் மக்கள் ஆதரவு எனும் மகத்தான சக்தி முன் இவை அனைத்தும் தோற்றுப் போனது. இனி நம்மை முடக்க நினைத்த அதே சாலைகளில் தமிழக வெற்றிக் கழகத்தின் முழக்கம் ஓங்கி ஒலிக்கும். எந்த மக்களிடையே நம் மீது வெறுப்பை பரப்ப அதிகார வர்க்கம் முயன்றதோ அதே மக்களின் ஆதரவோடு இனி ஒவ்வொரு ஊரிலும் நம் தலைவரின் மக்கள் சந்திப்பு நிகழும்.

இனி விசில் சத்தம் வீதிகளெங்கும் ஒலிக்கட்டும். மாற்றத்திற்கான மக்களின் கனவு பலிக்கட்டும். எளியவர்களுக்கான மக்களாட்சி மலரட்டும்" என்று தெரிவித்தார்.

# 'ஆதவ் அர்ஜுனாவை விஜய் கண்டிக்க வேண்டும்' நயினார் நாகேந்திரன்





**சென்னை, மார்ச் 17:** நடிகர் ரஜினிகாந்த் தொடர்பான கருத்துக்கு தவெக தேர்தல் மேலாண்மை பொதுச்செயலாளர் ஆதவ் அர்ஜுனா மன்னிப்புக்கோர வேண்டும் என தமிழ்நாடு பாஜக மாநிலத்தலைவர் நயினார் நாகேந்திரன் தெரிவித்துள்ளார். இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ளப் பதிவில்,

திரைப்படத் துறையில் 50 ஆண்டுகளாகக் கோலோச்சிவரும் சிறந்த கலைஞர், உலகளவில் தமிழ்த் திரைப்படத்தின் முகமாகத் திகழ்பவர், தாதா சாகேப் பால்கே விருது, வாழ்நாள் சாதனையாளர் விருது, பத்ம பூஷண், பத்ம விபூஷண் போன்ற பல முக்கிய விருதுகளைப் பெற்று திரைத்துறையின் இமையத்தைத் தொட்டவர், சிறந்த ஆன்மிகவாதி எனப் பல பெருமைகளுக்குச் சொந்தக்காரர் சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த்.

மேலும் அனைத்து மூத்த தலைவர்களின் அன்பையும், நமது பிரதமர் நரேந்திர மோடியின் மரியாதையையும் பெற்றவராகத் திகழ்பவர். ஜாதி, மதம், மொழியைக் கடந்து அனைத்துத்தரப்பட்ட மக்களின் பேரன்பைப் பெற்றவர்.

அத்தகைய சிறந்த பண்பாளரைக் குறித்து தவெகவைச் சேர்ந்த ஆதவ் அர்ஜுனா பொதுவெளியில் தவறாகப் பேசுவது என்றும் ஏற்புடையதல்ல! அதைப் பார்த்துக் கொண்டு சூப்பர் ஸ்டார் அவர்களின் ரசிகர்களும் சும்மா இருக்க மாட்டார்கள்!

பத்திரிகைகளின்கவனத்தைப் பெறுவதற்காக, தமிழ்நாடு மக்களின் பேரன்பிற்குச் சொந்தக்காரரான ரஜினிகாந்த் குறித்து ஆதவ் அர்ஜுனா பேசியதை அக்கட்சியின் தலைவர் கண்டிப்பதோடு, இது போன்ற செயல்களில் ஈடுபட வேண்டாம் என்ற அறிவுரையும் வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், சூப்பர் ஸ்டார் ரஜினி காந்தின் ரசிகர்களிடம் ஆதவ் அர்ஜுனா மன்னிப்பு கேட்க வேண்டும் என வலியுறுத்துகிறேன்." எனக் குறிப்பிட்டுள்ளார்.

START YOUR OWN EPAPER WEBSITE TODAY!
CALL 7789941009

ADVERTISE WITH US
CONTACT US 9438610756

WANTED: FEMALE ANCHORS
• Age 18 to 35
• Good Looking
• Work from Home (Full-time/Part-time)
Salary: Rs. 20,000 to 50,000
Call / Whatsapp:
7789941009
9337501889

சிவா விஷ்ணு திருமண தகவல் மையம்
அனைத்து இனத்தவர்களுக்கும்
முதல் மணம் • மறுமணம்
பொருத்தமான ஜாதகங்கள் அனுப்பப்படும்
மணமகன் • மணமகள் தேவைப்படும் அனைவருக்கும்
நம்பகமான மற்றும் விரைவான சேவை
✓ அனைத்து இனத்தவர்களுக்கும் பதிவு
✓ ஜாதக பொருத்தம் பார்த்து அனுப்பப்படும்
✓ முதல் திருமணம் & மறுமணம் வசதி
✓ உடனடி தொடர்பு & சிறந்த பொருத்தம்
தொடர்புக்கு: 9150989424

Special Invitation
to retired seniors house wives businessmen bankers CAs NRIs age.30 to 70.qualification SSLC/graduate
To restart your second Innings with a career business opportunity
♦ Flexible timing unlimited incentive
♦ No target work from home training provided For successful business.
Contact Mr. Irudaya Raj
Ph.9486634780

Vilambaram
We provide Targeted Leads to grow your buisness
Boost your business
Call:: 91 7789941009, 9337501889
www.vilambaram.com

keerthi foundation
De Addiction Cum Rehabilitation Centre
INTERNSHIP & JOB OPPORTUNITIES
MSW & M.Sc Psychology - Freshers
Internship: Clinical Training, Counseling Practice, Case Work
Jobs: Social Worker, Jr Psychologist, Rehab Counselor
Build Your Career in De-Addiction & Mental Health Care
Call: 9841945060 | 7845027710
www.keerthifoundation.com

WANTED
JAY SECURITY FORCE
பணி வாய்ப்புகள்
• பணிகள்: A.S.D செக்யூரிட்டி கார்டுகள் ஹவுஸ் கீப்பிங்
• இடங்கள்:
• பெருங்குடி, துரைப் பாக்கம்
• காரப்பாக்கம், சோழிங்கநல்லூர்
• விருகம்பாக்கம்
பெண்கள் தேவை
சம்பளம்:- 12500 முதல் 20000 வரை
9791061354 - 8072969599
Head office
NO :1, அம்பாள் அவின்யூ,
வி.பி.ஜி அவின்யூ, விரிவாக்கம்,
மேட்டுக்குப்பம்- சென்னை-97

ADIYOGI
REAL ESTATE WHOLESALE
VADACHENNAI CALL DRIVER
ஆதியோகி
ரியல் எஸ்டேட்
CMDA DTCP அப்ரூவல்
வீட்டுமனைகள் விற்பனை
_CONTACT_
8939228901

Vilambaram
www.vilambaram.com
We are Digital Marketing Agency
We are the LEADS GENERATION FACTORY For Your REAL ESTATE BUSINESS
* Business Lead
* 100% Verified Lead
* Targeted Lead
GROW YOUR BUSINESS WITH US
for more details
+91 7789941009
+91 9337501889
vilambarampage@gmail.com
80 %OFF SPECIAL OFFER
90 DAYS MONEY BACK GUARANTEE

WANTED
Site Supervisor required for construction work in Ambattur
Contact: 8428872887

SEVEN STARS LOGISTICS PVT.LTD.
we simplify shipping for your business
Our Services are ... Freight Forwarding, International Courier, Customs Clearance, Cargo Movement by Air, Sea and Road, Door to Door Service.
# 2, 2nd floor, Krishnan Koil Street, George Town, Chennai - 600 001. INDIA.
+91 44 43570909 +91 96770 88843
info@sevenstarslogistics.com www.sevenstarslogistics.com

WANTED
Needed female staff to look after children, patients.
Contact
9150989424

just499®
MLM SOFTWARE
All Types of MLM Software Solutions Available
Binary Unilevel Matrix Board Generation ROI / Investment
ONLY Rs. 499
Website: just499.com
Phone/WhatsApp: 7789951009
Email: orderjust499@gmail.com

Sri Manjal Mart
தரமான ஆன்மீக பூஜை பொருள்களை குறைந்த விலையில் நிறைவாக வாங்க
20% OFF
www.manjalmart.com
7789951009
order@manjalmart.com

SADHANA DEVI.K
CAR WASH
SUPREME
Car Wash & Detailing
Car Foam Pressure Wash, Teflon Coating, Ceramic Wax Treatment, Under Chassis Painting, Interior Foam Wash / Stain Remover, Paint Correction / Protection
We Done Here
9840882711
7200043675
Supremecarwashchennai@gmail.com
No.17/4, Senniamman Koil Street, Tondiarpet, Chennai - 600 081.

WANTED
M/F லோடுமேன்,பிக்கர், ஹெல்ப்பர்,
வர/மாத சம்பளம்: 450-700. உணவு
இடம் free day/N8 shift
7540003588

அருள்தரும் தெய்வம்
என்றும் நம் இல்லங்களில்
www.arultharumdeivam.com
அற்புதமான ஆன்மீக செய்திகள், பரிகாரங்கள், ஸ்தல வரலாறு மற்றும் சுவாரஸ்யமான தகவல்கள் மாதம் இருமுறை படித்து ஆன்மீகத்தை அறியுங்கள்..

WANTED
Retd, VRS, Home Makers, NRIs, Business Person
Contact
8248951872



# கவிதை அரங்கம்!



உன்னைப் பார்த்தவுடன்
வெட்கத்தில்
சிக்கி தவிக்கிறது
என் வார்த்தைகள்
பேச வழியின்றி

நம் இருவரின் இதயங்கள்
காதலின் தாளத்தில்
ஒரே இசையாக
ஒலிக்கின்றன

உன் அருகில் இருந்தால்
நேரம் நிற்கிறது
உன் அன்பில்
நான் காலம் மறக்கிறேன்

உன் இதழ்களின்
மௌனத்தில் கூட
என் ஆசைகள்
திசை மாறுகின்றன

## வாழ்க்கை தத்துவம்...



ஆயிரம் உறவுகளால்
தர முடியாத பலத்தை
ஒரு அவமானம் தரும்

இறைவனுக்கு கொடுக்க நினைப்பதை
இல்லாதவர்களுக்கு கொடுங்கள்
ஏனென்றால் கடவுள் யாரிடமும்
கையேந்தி யாசகம் கேட்பதில்லை

உனக்கென்று ஒரு தன்மானம்
திமிர் இருக்கனும் அதை
யாருக்காகவும் எப்போதும்
விட்டுக்கொடுக்காதே

அவ்வப்போது தொலைதூரப் பயணம்
சென்று அங்கேயே தொலைத்து
விட்டு வாருங்கள் உங்களைத்
தொல்லை செய்யும் தொல்லைகளை

# அடாவடிக் குமார்...

வாசனை மாறாத நினைவுகள் அன்று ஒரு பள்ளிக்குச் செல்லும் காலைப் பொழுது. ஜானு தன் வேலைகளை முடித்துவிட்டு அவசர அவசரமாகக் கிளம்பிக்கொண்டிருந்தாள். "இந்தாடா ஜானு... இன்னைக்கு அம்மா அடை தோசை சுட்டிருக்கேன். சாப்பிட்டுட்டுப் போம்மா..." என்று அன்புடன் தட்டை நீட்டினாள் அவள் அம்மா.

தட்டில் இருந்த அடை தோசை ஓரத்தில் சற்று கருகியிருந்தது. அதைப் பார்த்ததும் ஜானு முகம் சுளித்தாள். "அம்மா! தோசை கருகிப் போயிருக்கு பாரு... எனக்கு இது வேண்டாம்," என்று செல்லமாக அடம் பிடித்தாள்.

"இல்லடா செல்லம்... அடுப்புல விறகு ஒண்ணு கூடுதலா எரியவும், உங்க அப்பா கூப்பிட்டாருன்னு போயிட்டேன். வந்து பார்க்குறதுக்குள்ள லேசா கருகிடுச்சு. ஆனா சுவை ரொம்ப நல்லா இருக்கும், சாப்பிடுடா என் தங்கம்," என்று சொல்லி, ஒரு துண்டு தோசையைப் பிட்டு ஜானுவின் வாயில் ஊட்டினாள் அம்மா.

ஜானு மென்று பார்த்தாள். கருகிய மணம் அந்த விறகு அடுப்பின் வாசத்தோடு சேர்ந்து ஒரு பிரத்யேகமான சுவையைத் தந்தது. விறகு அடுப்புச் சமையலுக்கே உரிய அந்தத் தனித்துவமான ருசியில் ஜானு தட்டையே காலி செய்தாள். "அம்மா... போயிட்டு வர்றேன்!" என்று சொல்லிவிட்டுத் தன் மஞ்சப்பையைத் தூக்கிக்கொண்டு பள்ளிக்கு ஓடினாள்.

"அம்மா... என்னம்மா பண்ற? ஏதோ யோசனையில இருக்கீங்க போல!" - ஜானுவின் மகள் அவள் தோளைத் தட்டியபோதுதான் ஜானு நிகழ்காலத்திற்கு வந்தாள்.

கையில் இருந்த மின்னணு அடுப்பின் சுவிட்சைப் பார்த்தபடி ஜானு பெருமூச்சு விட்டாள். "இன்னைக்கு நம்மால ஒரு வேளை சாப்பாடு கூட விறகு அடுப்புல சமைக்க முடியலையேன்னு பார்த்தேன் இப்போ நாகரிகம்ங்கிற பேர்ல சிலிண்டர், ரைஸ் குக்கர், இன்டக்ஷன் அடுப்புன்னு எவ்வளவோ வந்துடுச்சு. ஆனா, அன்னைக்கு நம்ம பாட்டி விறகு அடுப்புல சுட்டுக் கொடுத்த அந்த ஆரோக்கியத்துக்கும் சுவைக்கும் இதெல்லாம் ஈடாகுமா?" என்று கேட்டாள்.

இன்று நாம் சமைக்கும் உணவில் நவீன வசதிகள் இருக்கலாம், ஆனால் அந்த மண்ணின் மணமும் உழைப்பின் வாசனையும் குறைந்துதான் போயிருக்கிறது. ஒருவேளை சிலிண்டர் தட்டுப்பாடு வரும்போதுதான் நமக்கு அந்தப் பழைய விறகு அடுப்பின் அருமை மீண்டும் நினைவுக்கு வருகிறது.

அப்போது வாசலில் அலைபேசி ஒலிக்க, சிலிண்டர் விநியோகிப்பாளர் வந்திருக்கும் சத்தம் கேட்டது. "அம்மா... சிலிண்டர் வந்தாச்சு!" என்ற மகளின் குரல் கேட்டு, ஜானு தன் பழைய நினைவுகளில் இருந்து வெளிவந்தாள். சிலிண்டரை வாங்குவதற்கான பணத்தை எடுத்துக்கொண்டு அவள் வாசலை நோக்கி நடந்தாள். பழைய விறகு அடுப்பு காலம் திரும்ப வராதா என்ற ஏக்கம் ஒருபுறம் இருந்தாலும், ஓடிக்கொண்டிருக்கும் இந்த எந்திர வாழ்க்கைக்கு ஈடுகொடுக்க சிலிண்டர் அடுப்பைத் தஞ்சம் அடைவதைத் தவிர வேறு வழியில்லை.



கவிஞர் ஜானகி
துறையூர்

## சிரிப்பு வருது.! சிரிப்பு வருது.!!



*குறைகக்கிற நாய் கடிக்காது ஏன் தெரியுமா.?*

*விடை: ஒரே சமயத்தில் இரண்டு வேலையை எப்படி செய்ய முடியும்.*

*ஒருத்தன் சர்க்கரை வாங்கிகிட்டு வந்தானாம். ஆனா 100G சர்க்கரை குறைஞ்சு இருந்துச்சாம் ஏன்.?*

*விடை: ஏன்னா நடந்து வந்த SUGAR குறைஞ்சிடும்ல அதான்.*



# தினம் ஒரு சமையல்



## பாசிப்பருப்பு பீன்ஸ் பொரியல்

**தேவையான பொருட்கள்:**

| | |
|---|---|
| பீன்ஸ் | -400 கிராம் |
| பாசிப்பருப்பு | -1/4 கப் அளவு |
| வெங்காயம் | -2 |
| எண்ணெய் | -1/4 கப் அளவு |
| துருவிய தேங்காய் | -1/2 மூடி |
| கடுகு | -1 ஸ்பூன் |
| கருவேப்பிலை | -10 |
| மிளகாய் தூள் | -1/2 ஸ்பூன் |
| மஞ்சள் தூள் | -1/4 ஸ்பூன் |

**செய்முறை:**



பீன்ஸை பொடியாக நறுக்கிக் கொள்ளவும் இதனை குக்கரில் சேர்த்து கூடவே பாசிப்பருப்பு சேர்த்து அரை டம்ளர் தண்ணீர் விட்டு இரண்டு விசில் வேக வைக்கவும்.

ஸ்டவ் வில் பாத்திரத்தை வைத்து எண்ணெய் ஊற்றி கடுகு கருவேப்பிலை நறுக்கிய வெங்காயம் சேர்த்து தாளிக்கவும்.

வெங்காயம் வதங்கியதும் வேகவைத்த பீன்ஸ் மிளகாய் தூள் மஞ்சள் தூள் உப்பு சேர்த்து தண்ணீர் வற்றும் வரை சமைக்கவும். துருவிய தேங்காய் சேர்த்து ஒரு நிமிடம் அடுப்பில் வைத்து தீயை நிறுத்தவும்.

## கண்டங்கத்தரி பயன்கள்




கண்டங்கத்தரிக்கு வட்டுக்கத்தரி, கண்டகாரி, முள்ளிக்காய், கண்டங்காரி, பொன்னிறத்தி, முள்கொடிச்சி, சிங்கினி ஆகிய வேறு பெயர்கள் உண்டு. சிறுபஞ்சமூல வகைகளில் ஒன்றாகக் கருதப்படுகின்ற செடி வகையைச் சேர்ந்ததும் எல்லா இடங்களிலும் வளரக் கூடியதுமான கண்டங்கத்தரி (YELLOW FRUIT NIGHTSHADE) அரிய பல மருத்துவ குணங்களை தன்னகத்தே கொண்டுள்ளது.

மூலிகை வகைகளில் கண்டங்கத்தரியானது முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகும். "தச மூலம்" என்று சொல்லப்படுவது சித்த மருந்துகளில் புகழ் பெற்றதாகும். அதாவது பத்து வகையான மூலிகைகளின் வேர்களைக் கொண்டு இந்த மருந்து தயாரிக்கப் படுவதால் தச மூலம் எனப் பெயர் பெற்றது. இப்பத்து வகை மூலிகைகளில் கண்டங்கத்தரியும் ஒன்றாகும் என்பது இதற்கு பெருமையே.

வட்டுக்கத்தரி செடி இலங்கை மற்றும் தமிழகத்திலுள்ள எல்லா மாவட்டங்களிலும் குப்பை மேடு கரிசல் மண் செம்மண் வண்டல் மண்ணில் மானாவாரியாக வளர்ந்து காணப்படுகின்றது. இலங்கையில் இதனை வட்டுக்கத்தரி என்றே அதிகமாக அழைக்கின்றனர்.

நீல நிறத்திலான பூக்களினையும் சிறிய கத்தரிக்காய் வடிவிலான காய்களினையும் காய் முற்றி பழுக்கும் போது மஞ்சள் நிறத்திலும் காணப்படுவதுடன் கத்தரிக்காய் வகைகளில் ஒன்றான இதன் இலை பூ காய் பழம் விதை பட்டை வேர் என ஒவ்வொன்றும் மருத்துவ குணமுடையனவாக காணப்படுகின்றது.

இளம் பிள்ளை வாத நோய் தாக்கிய சிறுவர்களுக்கு, கண்டங்கத்தரி தளைகளை நீருடன் மட்பாண்டத்தில் வேக வைத்து நீரை குளியல் செய்து வர குணமாகும்.

மஞ்சள் நிறத்திலான பழுத்தை நன்கு உலர்த்தி நெருப்பில் சுட்டு பொடியாக்கி ஆடாதோடை இலைகளில் வைத்துச் சுருட்டு போலச் செய்து வாயில் புகை பிடித்து வரும் போது பல் வலி பல்கூச்சம் மற்றும் பல் அரணை என்பன தீருவதுடன் அதனை உணவாக எடுத்துக் கொள்ளும் போது இரத்த அழுத்தம் சீர் செய்யப்படும்

கண்டங்கத்திரி வேர் ஆடு தொடா வேர் சுக்கு திப்பிலி மற்றும் ஓமம் போன்றவற்றை இடித்து பாத்திரத்தில் போட்டு தண்ணீர் ஊற்றி நன்கு சுண்ட காய்ச்சி தினமும் காலை மாலை குடித்து வரும் போது கபம் சம்பந்தமான காய்ச்சல் காணாமல் போவதுடன் இக்காயை சுண்டைக்காய் போன்று குழம்பிலிட்டு அளவாக அருந்தி வரும் போது பசி தூண்டப்படும்.

கண்டங்கத்தரி பழத்தை மண் பாண்டத்தில் இட்டு தண்ணீர் சேர்த்து வேக வைத்து குழம்பு பதமாக இருக்கும் போது ஒரு பங்கு நல்லெண்ணெய் கூட்டி மெழுகு பதம் வரை நன்கு காய்ச்சி வடித்து பெறப்பட்ட கலவையை வெண் குஷ்டத்திற்கு மேல் தடவி வரும் போது வெண் குஷ்டம் குணமடைவதுடன் இதனை காதில் இரண்டு சொட்டு விட்டு வரும் போது காது நோய் குணமடையும்.

# சினிமா

## சேயோன் படத்தில் சிவகார்த்திகேயனுடன் இணைந்து நடிக்கும் உச்ச நட்சத்திரம்.. யார் தெரியுமா?




சமீபத்தில் வெளிவந்து மாபெரும் வெற்றிபெற்றுள்ள திரைப்படம் தாய் கிழவி. இப்படத்தை அறிமுக இயக்குநர் சிவகுமார் முருகேசன் இயக்கியிருந்தார்.

முதல் படத்திலேயே மாபெரும் வெற்றியை தன்வசப்படுத்திய சிவகுமார், அடுத்ததாக சிவகார்த்திகேயனை வைத்து சேயோன் என்கிற படத்தை இயக்கி வருகிறார். இப்படத்தை உலகநாயகன் கமல் ஹாசன் தயாரிக்கிறார். அண்மையில் இப்படத்தின் அறிவிப்பு வீடியோ வெளிவந்து நல்ல வரவேற்பு பெற்றது.

இந்த நிலையில், சேயோன் திரைப்படத்தில் சிவகார்த்திகேயனுடன் இணைந்து உச்ச நட்சத்திரம் ஒருவர் நடிக்கவிருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது. அவர் வேறு யாருமில்லை, நடிகர் கமல் ஹாசன்தான். ஆம், சேயோன் திரைப்படத்தில் கமல் ஹாசன் விருமாண்டி கதாபாத்திரத்தில் நடிக்கவிருப்பதாக கூறப்படுகிறது.

சோழனிடம் அழுது மன்னிப்பு கேட்ட பல்லவன், அவர் என்ன செய்தார் தெரியுமா?... அய்யனார் துணை சீரியல்

இதுமட்டும் உறுதியானால் கண்டிப்பாக சேயோன் படத்தின் பிசினஸ் மிகப்பெரிய அளவில் உயரும் என்கின்றனர். மேலும் இது தமிழ் சினிமா ரசிகர்களுக்கும் மாபெரும் ட்ரீட்டாக அமையும் என்பதில் எந்த ஒரு சந்தேகமும் இல்லை.



மாளவிகா செம ஹாட் ஆக போஸ் கொடுத்து இருக்கும் லேட்டஸ்ட் போட்டோஷூட் ஸ்டில்களை பாருங்க.

## Dude பட இயக்குநரின் அடுத்த படம்.. ஹீரோ இந்த முன்னணி நடிகரா?



கடந்த ஆண்டு வெளிவந்து மாபெரும் வெற்றிபெற்ற திரைப்படம் Dude. பிரதீப் ரங்கநாதன், சரத்குமார், மமிதா பைஜூ ஆகியோர் இணைந்து நடித்திருந்த இப்படத்தை அறிமுக இயக்குநர் கீர்த்திஸ்வரன் இயக்கியிருந்தார். இப்படத்தை மைத்திரி மூவி மேக்கர்ஸ் தயாரித்திருந்தனர்.

காதல் கதைக்களத்தில் உருவாகி வெளிவந்த இப்படம் கடும் சர்ச்சையை சந்தித்தது. பலரும் கண்டனங்களை தெரிவித்தனர். அதையெல்லாம் தாண்டி Dude திரைப்படம் உலகளவில் ரூ. 100 கோடிக்கும் மேல் வசூல் செய்தது. இதனை தயாரிப்பு நிறுவனமே அதிகாரப்பூர்வமாக அறிவித்தது.

Dude படத்தை தொடர்ந்து இயக்குநர் கீர்த்திஸ்வரன் அடுத்ததாக யாரை வைத்து தனது இரண்டாவது படத்தை இயக்கப்போகிறார் என்கிற கேள்வி எழுந்தது.

இந்நிலையில், நடிகர் சிம்புவுடன் இயக்குநர் கீர்த்திஸ்வரன் கைகோர்க்கவுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. இதற்கான ஸ்கிரிப்ட் ஒர்க் தற்போது நடந்து வருவதாகவும் தகவல் தெரிவிக்கின்றனர்.

# [இன்று] சர்வதேச மகளிர் தினத்தின் வரலாறு




கார்ல் மரியா ஸ்டாட்லர் (1888 - நாச் 1943), பொது டொமைன், விக்கிமீடியா காமன்ஸ் வழியாக.

சர்வதேச மகளிர் தினத்தின் வரலாறு சர்வதேச மகளிர் தினம் (IWD) 1900களின் முற்பகுதியிலிருந்து அனுசரிக்கப்படுகிறது - தொழில்மயமாக்கப்பட்ட உலகில் பெரும் விரிவாக்கம் மற்றும் கொந்தளிப்பான காலம், மக்கள்தொகை வளர்ச்சி மற்றும் தீவிர சித்தாந்தங்களின் எழுச்சியைக் கண்டது.

பிப்ரவரி மாதத்தின் கடைசி ஞாயிற்றுக்கிழமை, முதலாம் உலகப் போரில் 2 மில்லியனுக்கும் அதிகமான ரஷ்ய வீரர்கள் கொல்லப்பட்டதற்கு பதிலளிக்கும் விதமாக "ரொட்டி மற்றும் அமைதி" என்ற கோரிக்கைக்காக ரஷ்ய பெண்கள் வேலைநிறுத்தத்தைத் தொடங்கினர். அரசியல் தலைவர்களால் எதிர்க்கப்பட்ட பெண்கள், நான்கு நாட்களுக்குப் பிறகு ஜார் பதவி விலக வேண்டிய கட்டாயம் ஏற்படும் வரை தொடர்ந்து வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டனர். தற்காலிக அரசாங்கம் பெண்களுக்கு வாக்களிக்கும் உரிமையை வழங்கியது. ரஷ்யாவில் அப்போது பயன்பாட்டில் இருந்த ஜூலியன் நாட்காட்டியின்படி பிப்ரவரி 23 ஞாயிற்றுக்கிழமை பெண்கள் வேலைநிறுத்தம் தொடங்கியது. மற்ற இடங்களில் பயன்பாட்டில் இருந்த கிரிகோரியன் நாட்காட்டியில் இந்த நாள் மார்ச் 8 ஆகும்.

1975

சர்வதேச மகளிர் தினம் முதன்முறையாக ஐக்கிய நாடுகள் சபையால் 1975 இல் கொண்டாடப்பட்டது. பின்னர் டிசம்பர் 1977 இல், பொதுச் சபை, அவர்களின் வரலாற்று மற்றும் தேசிய மரபுகளுக்கு ஏற்ப, உறுப்பு நாடுகளால் ஆண்டின் எந்த நாளிலும் பெண்கள் உரிமைகள் மற்றும் சர்வதேச அமைதிக்கான ஐக்கிய நாடுகள் தினத்தைக் கொண்டாட வேண்டும் என்ற தீர்மானத்தை நிறைவேற்றியது.

1996 ஆம் ஆண்டு

ஐ.நா. தனது முதல் வருடாந்திர கருப்பொருளான "கடந்த காலத்தைக் கொண்டாடுதல், எதிர்காலத்திற்கான திட்டமிடல்" என்பதை அறிவித்தது, அதைத் தொடர்ந்து 1997 ஆம் ஆண்டில் "அமைதி மேசையில் பெண்கள்", 1998 இல் "பெண்கள் மற்றும் மனித உரிமைகள்", 1999 இல் "பெண்களுக்கு எதிரான வன்முறை இல்லாத உலகம்", மற்றும் பலவற்றை ஒவ்வொரு ஆண்டும் அறிவித்தது .

2000

புதிய மில்லினியத்திற்குள், பெரும்பாலான நாடுகளில் சர்வதேச மகளிர் தினத்திற்கான முக்கிய நிகழ்வுகள் குறைவாகவே இருந்தன. உலகம் முன்னேறியிருந்தது, பல துறைகளில், பெண்ணியம் ஒரு பிரபலமான தலைப்பாக இல்லை. சர்வதேச மகளிர் தினத்தை மீண்டும் தூண்டிவிடவும், அதற்குத் தகுதியான மரியாதையை வழங்கவும், மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தவும் ஏதாவது தேவைப்பட்டது. செய்ய வேண்டிய அவசர வேலைகள் இருந்தன - போராட்டங்கள் வெல்லப்படவில்லை, பாலின சமத்துவம் இன்னும் அடையப்படவில்லை. முக்கிய மக்களை ஈடுபடுத்தவும், கூட்டு நடவடிக்கையை ஊக்குவிக்கவும் ஆதரிக்கவும் ஒரு வலுவான தேவை இருந்தது.

2001

பல்வேறு மகளிர் குழுக்கள், தொண்டு நிறுவனங்கள் மற்றும் பிற அமைப்புகளுடன் ஒரு வருட திட்டமிடல் மற்றும் கூட்டு உரையாடல்களைத் தொடர்ந்து, internationalwomensday.com தளம், நாளை மீண்டும் உற்சாகப்படுத்துதல் மற்றும் வெகுஜன பங்கேற்பை அழைப்பது என்ற குறிப்பிட்ட நோக்கத்துடன் தொடங்கப்பட்டது, இந்த கவனம் இன்றுவரை தொடர்கிறது, பெண்களின் சாதனைகளைக் கொண்டாடுவதன் மூலமும், அவற்றைக் காணக்கூடியதாக மாற்றுவதன் மூலமும், அதே நேரத்தில் பாலின சமத்துவத்தை விரைவுபடுத்துவதற்கான அழைப்பைத் தொடர்கிறது. சமூக ஊடகங்களுக்கு முந்தைய உலகில், சமூகங்களை இணைக்கவும் அணிதிரட்டவும் பேஸ்புக் இல்லை; நிகழ்வுகளை வெளியிடவும் விளம்பரப்படுத்தவும் Eventbrite இல்லை; கூட்டு நடவடிக்கையைத் தூண்டுவதற்கு Instagram, Twitter, LinkedIn அல்லது TikTok இல்லை. பெண்களின் எழுச்சி இன்னும் பெரும்பாலும் ஆண்களின் வீழ்ச்சியாகக் காணப்பட்ட காலம் இது. எனவே, 2001 ஆம் ஆண்டில், IWD நிகழ்வுகளை ஊக்குவிப்பதற்கும், அன்றைய தினம் மற்றும் பரந்த பாலினப் பிரச்சினைகள் பற்றிய தகவல்களைப் பகிர்வதற்கும், பெண்களின் சாதனைகளைக் கொண்டாடுவதற்கும் ஒரு இலவச பயனுள்ள மையத்தை வழங்கும் கூட்டு மனப்பான்மையில் வலைத்தளம் தொடங்கப்பட்டது.

2011

ஆம் ஆண்டு 2011 ஆம் ஆண்டு சர்வதேச மகளிர் தினத்தின் 100வது நூற்றாண்டு விழாவைக் கொண்டாடியது - முதல் IWD நிகழ்வு சரியாக 100 ஆண்டுகளுக்கு முன்பு 1911 இல் ஆஸ்திரியா, டென்மார்க், ஜெர்மனி மற்றும் சுவிட்சர்லாந்தில் நடைபெற்றது. அமெரிக்காவில், ஜனாதிபதி பராக் ஒபாமா மார்ச் 2011 ஐ " பெண்கள் வரலாற்று மாதம் " என்று அறிவித்தார், அமெரிக்கர்கள் நாட்டின் வரலாற்றை வடிவமைப்பதில் "பெண்களின் அசாதாரண சாதனைகளை" சிந்தித்து IWD ஐக் குறிக்க அழைப்பு விடுத்தார். அப்போதைய வெளியுறவுத்துறை செயலாளர் ஹிலாரி கிளிண்டன், "100 பெண்கள் முன்முயற்சி: சர்வதேச பரிமாற்றங்கள் மூலம் பெண்கள் மற்றும் சிறுமிகளை மேம்படுத்துதல்" என்ற திட்டத்தைத் தொடங்கினார். யுனைடெட் கிங்டமில், பிரபல ஆர்வலர் அன்னி லெனாக்ஸ், லண்டனின் சின்னமான பாலங்களில் ஒன்றின் வழியாக ஒரு அணிவகுப்பை வழிநடத்தி, உலகளாவிய தொண்டு நிறுவனமான WOMEN க்கு ஆதரவாக விழிப்புணர்வை ஏற்படுத்துகிறார். ஆக்ஸ்பாம் போன்ற மேலும் தொண்டு நிறுவனங்கள் விரிவான IWD செயல்பாட்டை நடத்தியுள்ளன. பல பிரபலங்கள் மற்றும் வணிகத் தலைவர்கள் இந்த நாளை தீவிரமாக ஆதரிக்கின்றனர். IWD இறுதியாக மிகவும் பிரதான நீரோட்டமாகவும் உள்ளடக்கியதாகவும் மாறத் தொடங்கியது, எல்லா இடங்களிலும் குழுக்கள் பங்கேற்கின்றன.

IWD வரலாறு மற்றும் அணிவகுப்புகள் பற்றி

2025 மற்றும் அதற்குப் பிறகு உலகம் பெண்கள் சமத்துவம் மற்றும் விடுதலை பற்றிய பெண்கள் மற்றும் சமூகத்தின் சிந்தனைகளில் குறிப்பிடத்தக்க மாற்றத்தையும் மனப்பான்மை மாற்றத்தையும் கண்டுள்ளது. இளைய தலைமுறையைச் சேர்ந்த பலர் பெண்களுக்கான அனைத்துப் போராட்டங்களும் வெற்றி பெற்றுவிட்டன என்று உணரலாம், அதே நேரத்தில் 1970கள் மற்றும் அதற்குப் பிறகு பல பெண்ணியவாதிகள் ஆணாதிக்கத்தின் நீண்ட ஆயுளையும் ஆழமாக வேரூன்றிய சிக்கலான தன்மையையும் நன்கு அறிந்திருக்கிறார்கள். வாரிய அறையில் அதிகமான பெண்கள், சட்டமன்ற உரிமைகளில் அதிக சமத்துவம் மற்றும் வாழ்க்கையின் ஒவ்வொரு அம்சத்திலும் ஈர்க்கக்கூடிய முன்மாதிரிகளாக பெண்கள் தெரிவுநிலை அதிகரித்திருப்பதால், பெண்கள் உண்மையான சமத்துவத்தைப் பெற்றுள்ளனர் என்று ஒருவர் நினைக்கலாம். துரதிர்ஷ்டவசமான உண்மை என்னவென்றால், பெண்கள் இன்னும் தங்கள் ஆண் சகாக்களுக்கு சமமாக ஊதியம் பெறவில்லை, வணிகம் அல்லது அரசியலில் பெண்கள் இன்னும் சம எண்ணிக்கையில் இல்லை, மேலும் உலகளவில் பெண்களின் கல்வி, சுகாதாரம் மற்றும் அவர்களுக்கு எதிரான வன்முறை ஆண்களை விட மோசமாக உள்ளது. இருப்பினும், பெரிய முன்னேற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. எங்களிடம் பெண் விண்வெளி வீரர்கள் மற்றும் பிரதமர்கள் உள்ளனர்.


பல செய்தி வலைத்தளங்கள் தங்கள் வாடிக்கையாளர்களுடன் இணைந்து கட்டண அடிப்படையிலான 'சிறப்பு IWD அம்சங்கள்' இயக்குவதன் மூலம் IWD-யில் தீவிரமாக ஈடுபடுகின்றன. சர்ச்சையை உருவாக்குவதன் மூலமோ அல்லது ஒத்துழைப்பை உருவாக்குவதன் மூலமோ, பெண்களை மையமாகக் கொண்ட உள்ளடக்கத்திற்கு தெரிவுநிலை மற்றும் போக்குவரத்தை அதிகரிக்க தங்களால் முடிந்ததைச் செய்கின்றன. IWD-ஐ ஊக்குவிக்கும் உலகம் முழுவதும் அச்சு மற்றும் டிஜிட்டல் உள்ளடக்கத்தின் உயர்வு, பெண்கள் சமத்துவம் பற்றிய உலகளாவிய உரையாடல் மற்றும் கதைக்கு சாதகமாக பங்களிக்கிறது.


அரசியல் பேரணிகள், வணிக மாநாடுகள், அரசாங்க நடவடிக்கைகள் மற்றும் நெட்வொர்க்கிங் நிகழ்வுகள் முதல் உள்ளூர் பெண்கள் கைவினை சந்தைகள், நாடகம் நிகழ்ச்சிகள், ஃபேஷன் அணிவகுப்புகள் மற்றும் பலவற்றை உள்ளடக்கிய உலகெங்கிலும் உள்ள பெண்களை இணைக்கும் பணக்கார மற்றும் பன்முகத்தன்மை கொண்ட உலகளாவிய வலை. பல உலகளாவிய நிறுவனங்கள் தங்கள் சொந்த நிகழ்வுகள் மற்றும் பிரச்சாரங்களை நடத்துவதன் மூலம் IWD ஐ தீவிரமாக ஆதரிக்கிறது. எடுத்துக்காட்டாக, மார்ச் 8 ஆம் தேதி கூகிள் அதன் உலகளாவிய தேடல் பக்கங்களில் IWD ஐ கௌரவிக்கும் வகையில் அதன் கூகிள் டூடுலை அடிக்கடி மாறுகிறது - மேலும் அதன் சொந்த கணக்கு IWD கருப்பொருளையும் கூட நியமிக்கிறது, இது 2023 இல் DareToBe ஆகும் .

ஆண்டுதோறும், IWD நிச்சயமாக அந்தஸ்தில் அதிகரித்து வரும் ஒரு சக்திவாய்ந்த தருணமாகும். எனவே ஒரு மாற்றத்தை ஏற்படுத்துங்கள், உலகளவில் சிந்தித்து உள்ளூரில் செயல்படுங்கள்.

IWD செயல்பாட்டின் அனைத்து தேர்வுகளும் செல்லுபடியாகும், அதுதான் IWD ஐ மிகவும் உள்ளடக்கியதாக ஆக்குகிறது. நல்ல போராட்டத்தை எதிர்த்துப் போராட அனைவருக்கும் உதவ ஒரு இடமும் இடமும் இருக்கிறது. அதுதான் மிகுதியின் உணர்வு. எனவே ஒவ்வொரு நாளையும் சர்வதேச மகளிர் தினமாக்குங்கள். பெண்களின் எதிர்காலம் பிரகாசமாகவும், சமமாகவும், பாதுகாப்பாகவும், பலனளிப்பதாகவும் இருப்பதை உறுதிசெய்ய உங்களால் முடிந்ததைச் செய்யுங்கள்.

# தினம் ஒரு தலைவர்கள் எஸ்.ஓ.எஸ்.பி. உடையப்பா அம்பலம் வரலாறு






பாகனேரி எஸ்.ஓ.எஸ்.பி. உடையப்பா அம்பலம் என்பவர் சுதந்திர போராட்ட வீரர் ஆவார். இவர் காங்கிரஸ் கட்சியினை சேர்ந்தவர் மாற்றும் பாகனேரி ஜில்லாபோர்டு தலைவராக இருந்தார்.

1934 ஆம் ஆண்டு இவரது உறவினர்களான பாகனேரி நடராஜ தேவர், ஆர். வி. சுவாமிநாதன் தேவர், எஸ். ஓ. எஸ். பி. பில்லப்பா அம்பலம் மற்றும் இவரது முயற்சியாலும், மகாத்மா காந்தியடிகள் இரண்டாவது முறையாக பாகனேரிக்கு வருகை தந்தார். இவர் காந்தியடிகளுக்கு வெள்ளிப் பேழையில் வைத்து கதர் துணி அச்சிடப்பெற்ற வரவேற்பும், தங்கத்தினால் ஆன கைராட்டையும் பரிசாக வழங்கினார். அதனை மகாத்மா காந்தியடிகள் ஏலத்திற்கு விட்டார். அதனை இவரே அதிக விலைக்கு பெற்றார். இன்றளவும் அவருடைய குடும்பத்தில் இவை பாதுகாப்பாக உள்ளன.

சிவகங்கை மாவட்டத்தின், முன்னேற்றத்திற்கு முக்கிய காரணமாக இருந்தவர். ஜவகர்லால் நேரு, சத்தியமூர்த்தி, ராஜாஜி போன்றவர்களுடன் மிகவும் நெருக்கமாக இருந்தார். சுதந்திர போராட்டத்தில் ஈடுபட்ட இவருக்கு, ஆங்கில அரசாங்கம் ஆறு மாதம் சிறை தண்டனை வழங்கியது.

இவருடைய மகன் ஓ. சுப்பிரமணியன், 1977, 1980, 1984 ஆகிய ஆண்டுகளில் நடைபெற்ற சட்டமன்ற தேர்தல்களில், சிவகங்கை தொகுதியிலிருந்து, இந்திய தேசிய காங்கிரசு கட்சி சார்பாக போட்டியிட்டு, தமிழ்நாடு சட்டமன்றத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்டார்.



கள்ளர் மரபை சேர்ந்த சுதந்திர போராட்ட வீரர்கள் பாகனேரி நடராஜ தேவர், பாகனேரி எஸ்.ஓ.எஸ்.பி. பில்லப்பா அம்பலம், பாகனேரி எஸ்.ஓ.எஸ்.பி. உடையப்பா அம்பலம் (வெள்ளையர்கள் காலத்தில் ஜில்லாபோர்டு தலைவராக இருந்த முன்னோடி), ஆர். வி. சுவாமிநாதன் தேவர் (மத்திய இணையமைச்சர், குற்றப்பரம்பரை சட்டத்தை எதிர்த்து சட்டமன்றத்தில் முதல் தீர்மானம் கொண்டுவந்தவர்)

பாகனேரி நாட்டில் வழக்கத்தில் உள்ள புல்வநாயகி அம்மன் தல வரலாறு கூறும் ஒலைச்சுவடியில் எட்டாம் நாள் மண்டகப்படி வாளுக்குவேலிபுரத்தை சேர்ந்த பில்லப்பன் அம்பலம் மற்றும் உடையப்பா அம்பலம் ஆகியோரும் நடத்தும் உரிமை உடையவர்கள். மண்டகப்படியின் போது " முத்துவிசய ரகுநாத கரியான் வாளுக்குவேலி பில்லப்பா அம்பலம், உடையப்பா அம்பலம் புல்வநாயகி அம்மனுக்கு மண்டகப்படி வைத்துக் கேளிக்கை பார்க்கிற பிரஸ்தாபத்தினாலே" எனும் வாசகம் வாசிக்கப்படுகிறது.

# ஒடிசாவில் மூத்த தலைவர் உட்பட 11 மாவோயிஸ்ட்கள் சரண் - ஆயுதங்கள் ஒப்படைப்பு

**புவனேஸ்வர், மார்ச் 17:**

ஒடிசா மாநிலம் பஸ்தாரா-கும்சர் பகுதியில் மண்டல கமிட்டி உறுப்பினராக இருந்த மூத்த மாவோயிஸ்ட் தலைவர் நகுல் உட்பட 11 மாவோயிஸ்ட்கள் மாநில டிஜிபி குரானியா முன்னிலையில் ஆயுதங்களை ஒப்படைத்து விட்டு சரணடைந்தனர். இவரை பற்றி தகவல் அளிப்போருக்கு ரூ.22 லட்சம் பரிசு அறிவிக்கப்பட்டிருந்தது.

சரணடைந்த மற்ற 5 பேருக்கு மொத்தமாக ரூ.63.25 லட்சம் பரிசு அறிவிக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. ஏ.கே.-47, இன்சாஸ் ரைபிள், எஸ்எல்ஆர் துப்பாக்கிகள் உட்பட 11 ஆயுதங்களை மாவோயிஸ்ட்கள் ஒப்படைத்தனர்.

இந்நிகழ்ச்சியில் மாநில டிஜிபி குரானியா பேசுகையில், "நகுல் போன்ற மூத்த மாவோயிஸ்ட்கள் சரணடைந்துள்ளது மாவோயிஸ்ட் இயக்கம் பலவீனம் அடைந்துள்ளதை காட்டுகிறது. பாதுகாப்பு படையினரின் தொடர்ச்சியான தேடுதல் வேட்டையால், ஒடிசாவில் மாவோயிஸ்ட் இயக்கம் குறிப்பிடத்தக்க வகையில் அழிந்துள்ளது" என்றார்.

இதையடுத்து, இது தொடர்பாக மோசடி மற்றும் போதைப் பொருள் தொடர்புடைய இரண்டு வழக்குகள் பதிவுசெய்யப்பட்டன. சோதனையின்போது உஸ்பெகிஸ்தானைச் சேர்ந்த பெண் ஒருவரும் அவர்களுடன் அந்த வீட்டில் தங்கி இருந்தது தெரியவந்தது.

இந்த வழக்கில் அவருக்கு தொடர்பு உள்ளதா என்பது குறித்து விசாரணை நடைபெற்று வருகிறது.

# பத்ம விருதுகளுக்கான விண்ணப்பங்கள் தொடக்கம்: ஜூலை 31-இல் நிறைவு!



**புதுடெல்லி, மார்ச் 17:**

2027-ஆம் ஆண்டு பத்ம விருதுகளுக்கான விண்ணப்பிக்கும் நடைமுறை ஞாயிற்றுக்கிழமை தொடங்கியது.

நிகழாண்டு ஜூலை 31-ஆம் தேதியுடன் விண்ணப்பிப்பதற்கான காலஅவகாசம் நிறைவடைகிறது.

பல்வேறு துறைகளில் சாதனை புரிந்தவர்களுக்கு வழங்கப்படும் இந்த விருதுகளுக்கு தேர்ந்தெடுக்கப்படுவர்களின் பெயர்கள் 2027, ஜனவரி 26-ஆம் தேதி அறிவிக்கப்படவுள்ளது.

இதுகுறித்து மத்திய அரசு வெளியிட்ட செய்திக் குறிப்பில், ‘கலை, இலக்கியம் மற்றும் கல்வி, விளையாட்டு, மருத்துவம், சமூக சேவை, அறிவியல் மற்றும் பொறியியல், பொது விவகாரங்கள், வர்த்தகம் மற்றும் தொழில் உள்பட பல்வேறு துறைகளில் சாதனைகளை புரிபவர்களுக்கு 1954-ஆம் ஆண்டு முதல் பத்ம விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

குடிமக்களுக்கு வழங்கப்படும் மிக உயரிய விருதுகளில் ஒன்றாக கருதப்படும் பத்ம விபூஷண், பத்ம பூஷண் மற்றும் பத்ம ஸ்ரீ ஆகியவற்றுக்கு ராஷ்ட்ரீய புரஸ்கார் வலைதளத்தில் மார்ச் 15 முதல் இணைய வழியில் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. இதற்கான காலஅவகாசம் ஜூலை 31-ஆம் தேதியுடன் நிறைவடைகிறது. மருத்துவர்கள் மற்றும் விஞ்ஞானிகள் தவிர பொதுத் துறை நிறுவனங்களில் பணியாற்றுபவர்கள் உள்பட அரசு ஊழியர்கள் இந்த விருதுகளுக்கு விண்ணப்பிக்க முடியாது. இனம், பணி, நிலை அல்லது பாலினம் ஆகிய வேறுபாடுகளின்றி குடிமக்கள் அனைவரும் இந்த விருதுகளுக்கு விண்ணப்பிக்கலாம் அல்லது பரிந்துரைக்கலாம். மத்திய உள்துறை அமைச்சகத்தின் வலைதளத்தில் விருதுகள் என்ற தலைப்பிலும் வலைதளத்திலும் பத்ம விருதுகளுக்கு விண்ணப்பிக்கும் நடைமுறை விளக்கமாக பதிவிடப்பட்டுள்ளது’ எனத் தெரிவிக்கப்பட்டது.

# மேற்கு வங்கத்தில் அர்ச்சகர்கள் மதிப்பூதியம் ரூ.500 உயர்வு

**கொல்கத்தா, மார்ச் 17:**

மேற்கு வங்கம் உட்பட 5 மாநில சட்டப்பேரவைத் தேர்தல் தேதிகளை தேர்தல் ஆணையம் நேற்று அறிவித்தது.

இதற்கு சில மணி நேரங்களுக்கு முன்னதாக, மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜி எக்ஸ் தளத்தில் வெளியிட்ட பதிவில் கூறியிருப்பதாவது:

நமது சமூகங்களின் ஆன்மிக மற்றும் சமூக வாழ்க்கையை நிலை நிறுத்தும் நமது அர்ச்சகர்கள் மற்றும் மசூதிகளில் தொழுகைக்கு அழைப்பவருக்கு வழங்கப்பட்டு வரும் மாதாந்திர மதிப்பூதியத்தை ரூ.500 உயர்த்துவதில் மகிழ்ச்சி அடைகிறேன். இதன் மூலம் அவர்கள் இனி மாதம் ரூ.2,000 பெறுவார்கள். மேலும், அனைத்து புதிய விண்ணப்பங்களும் ஏற்கப்பட்டுள்ளன. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# நீதிமன்றங்கள் சேவை மனப்பான்மையுடன் செயல்பட வேண்டும்: உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி!

**புதுடெல்லி, மார்ச் 17:**


நீதிமன்றங்கள் சேவை மனப்பான்மையுடன் செயல்பட வேண்டும் என்று உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி சூர்ய காந்த் தெரிவித்தார்.

ஹிமாசல பிரதேச மாநிலம் மண்டியில் நீதிமன்ற வளாகம் கட்டுவதற்கு தலைமை நீதிபதி சூர்ய காந்த் ஞாயிற்றுக்கிழமை அடிக்கல் நாட்டினார். இதைத்தொடர்ந்து நடைபெற்ற நிகழ்ச்சியில் அவர் பேசுகையில், ‘வழக்குகளை விசாரிப்பதற்கான வசதிகள் அதிகரிக்கும்போது, நீதித்துறைக்குப் பெரும் பொறுப்பு ஏற்படுகிறது.

விவாதங்களில் அடிப்படை உரிமைகள் மீது கவனம் செலுத்தப்படுகிறது. அதேவேளையில், அடிப்படை கடமைகளும் அரசமைப்புச் சட்டத்தின் ஒரு பகுதியாகும். அந்தக் கடமைகள் நிலைநாட்டப்பட வேண்டும். இந்தக் கடமைகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட வேண்டும்.

நிவாரணம் மற்றும் நீதி கிடைக்கும் என்ற நம்பிக்கையில் மக்கள் நீதிமன்றத்தை நாடுகின்றனர். எனவே மருத்துவமனைகளைப் போல சேவை மனப்பான்மையுடன் நீதிமன்றங்கள் செயல்பட வேண்டும்’ என்றார்.

# ரவுடியை மணமேடையில் கைது செய்த ம.பி. போலீஸார்



**போபால், மார்ச் 17:**

ம.பி. மாநிலம் போபாலை சேர்ந்தவர் ஆகாஷ் நீல்கந்த் (என்கிற) புரா. அப்பகுதியில் இவர் மீது கொலை, கொள்ளை, மிரட்டல், கடத்தல் உட்பட 31 வழக்குகள் நிலுவையில் உள்ளன.

இந்நிலையில் இவரும், அதே பகுதியைச் சேர்ந்த சீமாவும் 6 ஆண்டுகளாக காதலித்து வந்தனர். இருவருக்கும் அண்மையில் திருமணம் நிச்சயமானது. கடந்த 11ம் தேதி போபாலில் உள்ள ஒரு திருமண மண்டபத்தில் திருமணச் சடங்குகள் நடந்து கொண்டிருந்தன. அப்போது அங்கு வந்த போலீஸார் திருமணக் கோலத்தில் இருந்த ஆகாஷை கைது செய்தனர்.

இதைப் பார்த்த மணமகள் சீமா கண்ணீர் மல்கக் கூறும்போது, “திருமணம் நடைபெறாவிட்டால் எனது வாழ்க்கை நாசமாகி விடும். இதில் எனது தவறு என்ன இருக்கிறது ? அவர் என்ன தவறு செய்தார் என்று எனக்கு தெரியவில்லை. 2 மணி நேரம் காத்திருந்து திருமணம் நடந்த பின்னர் அழைத்துச் செல்லுங்கள். உங்கள் காலில் விழுந்து கெஞ்சுகிறேன்" என்று கூறி போலீஸார் காலில் அவர் விழுந்து அழுதார். ஆனால் போலீஸாரோ, "ஆகாஷ் மீது ஏராளமான வழக்குகள் உள்ளன. இவர்கள் திருட்டு கும்பலைச் சேர்ந்தவர்கள். சட்ட விரோதத் தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். இவரை விட முடியாது" என்று தெரிவித்துவிட்டு ஆகாஷை அழைத்துச் சென்றனர். இதைத் தொடர்ந்து திருமணம் நின்றுபோனது.

# மத்திய கிழக்கு பதற்றம் எதிரொலி: வெளிநாடுகளுக்கு இயக்கப்படும் ஏர் இந்தியா விமானங்களுக்கு மத்திய அரசு சலுகை!



**புதுடெல்லி, மார்ச் 17:**

மத்திய கிழக்கு பதற்றம் எதிரொலியாக, வெளிநாடுகளுக்கு இயக்கப்படும் ஏர் இந்தியா விமானங்களுக்கு மத்திய அரசு, விமானம் பறக்கும் நேரம் தொடர்பான விதிகளை தளர்த்தியுள்ளது.

ஈரான், இஸ்ரேல்-அமெரிக்கா இடையேயான போரால் மத்திய கிழக்கு ஆசியாவில் பதற்றம் நிலவுகிறது. இதனால் முன்னெச்சரிக்கையாக ஈரான், இராக் வான் பகுதியை பயணிகள் விமானங்கள் தவிர்த்து வருகின்றன.

குறிப்பாக, இந்தியாவில் இருந்து ஐரோப்பா மற்றும் வட அமெரிக்கா நாடுகளுக்கு செல்லும் ஏர் இந்தியா விமானங்கள், ஈரான், இராக் வான் பகுதிகளை தவிர்த்து, எகிப்து வழியாக சுற்றி செல்கின்றன. இதனால் பயண நேரம் கூடுதலாகிறது.

இதை கருத்தில் கொண்டு மத்திய விமான போக்குவரத்து இயக்குநரகம் (டிஜிசிஏ) விமானிகளுக்கான பறக்கும் நேர கட்டுப்பாடு விதிகளை ஏப்ரல் மாதம் 30ஆம் தேதி வரை தளர்த்தியுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

அதாவது பறக்கும் நேரம் 1.30 மணி நேரம் முதல் 11.30 மணி நேரம் வரையும், பணி நேரம் 1.45 மணி நேரம் முதல் 11.45 மணி நேரம் வரையும் நீட்டிக்கப்பட்டு இருப்பதாக கூறப்படுகிறது.

இதுகுறித்து ஏர் இந்தியா மற்றும் டிஜிசிஏ-வை தொடர்பு கொண்டு செய்தியாளர்கள் கூடுதல் விவரம் பெற முயற்சித்தனர். ஆனால் அதற்கு எந்தப் பதிலும் இல்லை.

இந்தியாவில் இருந்து வெளிநாடுகளுக்கு இண்டிகோ நிறுவனமும் விமானங்களை இயக்குகிறது.

அந்த நிறுவனத்துக்கும் விதிகள் தளர்வு அளிக்கப்பட்டுள்ளதா என்பது குறித்து தகவல் இல்லை.

# சுப்ரீம் கோர்ட்டில் நிலுவையில் இருக்கும் 3,525 பொதுநல வழக்குகள் - மத்திய சட்ட அமைச்சகம் தகவல்

**புதுடெல்லி, மார்ச் 17:**

பொதுமக்களின் நலனை பாதிக்கும் விஷயம் குறித்து பாதிக்கப்பட்ட நபரோ, வேறு ஒரு தனிநபரோ அல்லது அரசு சாரா அமைப்புகளோ கோர்ட்டில் தொடருவதுதான் பொதுநல வழக்கு ஆகும். பொதுமக்களின் கடிதங்கள் அல்லது ஊடகங்களில் வெளியாகும் செய்திகளின் அடிப்படையில் தன்னிச்சையாகவே கோர்ட்டுகள் பொதுநல வழக்குகளை விசாரிக்க முடியும். சுற்றுச்சூழல் மாசு அடைவதை தடுத்தல், மனித உரிமை மீறல்கள், சாலை பாதுகாப்பு, ஊழல் ஒழிப்பு மற்றும் சமூகத்தில் ஒடுக்கப்பட்டவர்களின் உரிமைகளை பாதுகாத்தல் உள்ளிட்டவை இதன் நோக்கமாகும். இந்த நிலையில் கடந்த 10-ந்தேதி வரையிலான நிலவரப்படி சுப்ரீம் கோர்ட்டில் 3 ஆயிரத்து 525 பொதுநல வழக்குகள் நிலுவையில் உள்ளன.

இதில் 10 வருடத்தையும் கடந்த வழக்குகள் 698 ஆகும். கடந்த 2014 முதல் 2026 வரையிலான காலக்கட்டத்தில் மட்டும் 3 ஆயிரத்து 66 பொதுநலன் சார்ந்த வழக்குகள் தேக்கம் அடைந்திருக்கின்றன. இதில் அதிகபட்சமாக கடந்த ஆண்டு (2025) 570 வழக்குகள் தேங்கியிருக்கிறது. இதேபோல கடந்த 5 ஆண்டுகளில் மட்டும் 1,872 பொதுநல வழக்குகள் முடித்து வைக்கப்பட்டுள்ளன. மேற்கண்ட தகவலை மத்திய சட்ட மற்று நீதி அமைச்சகம் தெரிவித்துள்ளது.

# டெல்லி, கொல்கத்தாவில் ரூ.14.13 கோடி மதிப்பிலான கடத்தல் தங்கம், பணம் பறிமுதல்



**புதுடெல்லி, மார்ச் 17:**

கொல்கத்தா நகரில் இருந்து டெல்லிக்கு ரெயில் மூலம் தங்க கடத்தல் நடைபெறுகிறது என கிடைத்த தகவலை தொடர்ந்து வருவாய் நுண்ணறிவு இயக்குநரகத்தின் அதிகாரிகள் உஷாரானார்கள். அவர்கள் புதுடெல்லி ரெயில் நிலையத்திற்கு வெளியே தயாராக இருந்தனர்.

அப்போது, வெளியே வந்த சந்தேகத்திற்குரிய நபரை பிடித்து விசாரித்ததில், அவர் தங்க கடத்தலில் ஈடுபட்டது தெரிய வந்தது. இதுபற்றி மத்திய நிதி அமைச்சகம் வெளியிட்ட செய்தியில், வெளிநாட்டு தங்கம் கடத்தப்பட்டு இந்தியாவுக்குள் ரெயில் வழியே, கொண்டு வரப்பட்டு உள்ளது. அதனை உருக்கி, சட்ட விரோத வகையில் உருமாற்றம் செய்து, உள்ளூரில் கள்ளச்சந்தையில் விற்க முயன்றுள்ளனர். அவற்றின் மொத்த மதிப்பு ரூ.14.13 கோடியாகும். இதுதொடர்பாக 6 பேர் கைது செய்யப்பட்டு உள்ளனர் என தெரிவித்து உள்ளது.

அவர்களிடம் இருந்து ரூ.13.41 கோடி மதிப்பு கொண்ட 8.286 கிலோ தங்கம், ரூ.19.67 லட்சம் மதிப்பிலான 7.35 கிலோ வெள்ளி மற்றும் இந்திய மதிப்பில் ரூ.51.74 லட்சம் பணம் ஆகியவை பறிமுதல் செய்யப்பட்டு உள்ளது. சுங்க சட்ட பிரிவுகளின் கீழ் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டு, தொடர்ந்து விசாரணை நடத்தப்பட்டு வருகிறது.

# “இந்தியாவை இழிவுபடுத்துகிறார் ராகுல் காந்தி” - அமித் ஷா கடும் தாக்கு



**புதுடெல்லி, மார்ச் 17:**

டெல்லி ஏஐ மாநாட்டில் இளைஞர் காங்கிரஸார் அரை நிர்வாண போராட்டங்களை நடத்தியதன் மூலம் இந்தியாவை உலக நாடுகளின் மத்தியில் ராகுல் காந்தி இழிவுபடுத்தி வருகிறார் என்று மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா நேற்று தெரிவித்தார்.

அசாம் மாநிலம் குவாஹாட்டியில் ரூ.2,092 கோடி மதிப்பிலான நலத் திட்டங்களை நேற்று தொடங்கி வைத்த அமித் ஷா பேசியதாவது: தலைநகர் டெல்லியில் பாரத் மண்டபத்தில் கடந்த மாதம் நடைபெற்ற செயற்கை நுண்ணறிவு தாக்க மாநாட்டின் போது, இளைஞர் காங்கிரஸார் மேலாடையின்றி அரைநிரவாணப் போராட்டத்தில் ஈடுபட்டனர். இது, கடும் கண்டனத்துக்கு உரியது.

பிரதமர் மோடியையும் பாஜகவையும் விமர்சிக்கிறேன் என்ற பெயரில் ராகுல் காந்தி இந்தியாவையே இதுபோன்ற போராட்டங்களின் மூலம் எதிர்க்கத் தொடங்கியுள்ளார். சர்வதேச நாடுகள் பங்கேற்ற மாநாட்டில் ஆடையைக் களைந்து போராட்டம் நடத்தியதன் மூலம் காங்கிரஸ் கட்சி நாட்டுக்கு அவப்பெயரை ஏற்படுத்தியுள்ளது. நாங்களும் எதிர்க்கட்சியாக இருந்திருக்கிறோம். ஆனால் வரைமுறைகளை தாண்டியதில்லை. உலகம் முழுவதும் இந்தியாவின் வளர்ச்சியைப் பார்க்கவும், முதலீடு செய்யவும் திரண்டிருந்த வேளையில், அந்தத் தளத்தை ராகுல் காந்தி தனது சொந்த அரசியலுக்காகப் பயன்படுத்திக் கொண்டார். இந்தச் செயலுக்கு அவர் மன்னிப்புக் கேட்பதற்குப் பதிலாக, போராட்டத்தில் ஈடுபட்டவர்களை சிங்க இதயம் கொண்டவர்கள் என்று பாராட்டி பேசியது அவரது பொறுப்பற்றத்தனத்தை எடுத்துக் காட்டுகிறது. பாஜகவை எதிர்ப்பதற்கு உங்களுக்கு முழு உரிமை உண்டு, ஆனால் உலக அரங்கில் இந்திய இளைஞர்களுக்கான வாய்ப்புகளை இது போன்ற போராட்டங்கள் முடக்கிப் போட்டுவிடும். உங்களை மக்கள் மன்னிக்க மாட்டார்கள். சுகாதாரத் துறையில் சாதனை சுகாதாரத் துறையில் அசாம் தன்னிறைவு பெற்றுள்ளது.

புற்றுநோய் சிகிச்சைக்காக சென்னை, மும்பை, கர்நாடகா மற்றும் டெல்லி போன்ற பல இடங்களுக்கு அலைந்த அசாம் மக்கள், இனி தங்கள் மாநிலத்திலேயே உயர் சிகிச்சை பெறும் வசதி செய்யப்பட்டுள்ளது. இங்கு மருத்துவம் படிப்பதற்கான வாய்ப்புகள் இருந்தால், இந்திய மாணவர்கள் வெளிநாடு செல்ல வேண்டிய தேவை இருக்காது. இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# டெல்லி மெட்ரோவில் 2025-ம் ஆண்டில் 235.8 கோடி பயணிகள் பயணம்

**புதுடெல்லி, மார்ச் 17:**

டெல்லி மெட்ரோ, உலகின் 3-ம் பெரிய மெட்ரோ நெட்வொர்க் என்ற பெருமையை கொண்டது. 26 நகரங்களில் 1,143 கி.மீ. தொலைவை உள்ளடக்கிய இந்த நெட்வொர்க்கை பயன்படுத்தி தினசரி சராசரியாக 1.15 கோடி பேர் பயணம் செய்கின்றனர்.

நாடு முழுவதும் உள்ள மெட்ரோ ரெயில் அமைப்புகளில் 55 சதவீதம் பேர் டெல்லி மெட்ரோவை பயன்படுத்தி வருகின்றனர். இதில், கடந்த 2025-ம் ஆண்டில் டெல்லி மெட்ரோவில் 235.8 கோடி பயணிகள் பயணம் செய்திருக்கின்றனர். இது, அதற்கு முந்தின 2024-ம் ஆண்டுடன் ஒப்பிடும்போது, (223.5 கோடி பேர்) 12.3 கோடி கூடுதல் ஆகும். இதேபோன்று, 2025-ம் ஆண்டில் தினமும் 64.60 லட்சம் பேர் டெல்லி மெட்ரோ ரெயில்களில் பயணம் செய்துள்ளனர். இதில், 2025-ம் ஆண்டு ஆகஸ்டு 8-ந்தேதி அதிக அளவாக 81 லட்சத்து 87 ஆயிரத்து 674 பேர் ஒரே நாளில் பயணித்தது சாதனை பதிவாக உள்ளது.

# ரூ. 2 லட்சம் மோசடி: தொழிலதிபரிடம் கைவரிசை காட்டிய மோசடி கும்பல்

**மும்பை, மார்ச் 17:**

மராட்டிய மாநிலம் தானே நகரில் வியாபாரி வைரல் படேல் என்பவர் இனிப்புக் கடை நடத்தி வருகிறார். இந்நிலையில் நேற்று முன் தினம் வைரல் படேல் தனது இனிப்பு கடையில் வழக்கமான பணிகளில் ஈடுபட்டிருந்தபோது, இரண்டு நபர்கள் அவரைச் சந்தித்து தங்களை சமூக ஆர்வலர்கள் (RTI) என்று கூறிக்கொண்டனர்.

மேலும் வைரல் படேலின் கடைகளை மாநகராட்சி அதிகாரிகள் மூலம் ஆய்வு செய்ய வைத்து, அவற்றை நிரந்தரமாக மூட செய்துவிடுவதாக மிரட்டல் விடுத்தனர். இந்த மிரட்டலால் அதிர்ச்சியடைந்த படேல், உடனடியாகத் தானே குற்றப்பிரிவு காவல் நிலையதிற்கு சென்று தன்னிடம் ரூ.5 லட்சம் பணம் கேட்டு மிரட்டுவதாக அந்த இருவர் மீதும் புகார் அளித்தார்.

அந்த புகாரைப் பெற்றுக்கொண்ட போலீசார் மிகவும் துரிதமாகச் செயல்பட்டு விரிவான விசாரணையைத் தொடங்கினர். இதன்படி அந்த இரு நபர்களை கையும் களவுமாகப் பிடிக்க வசந்த் விஹார் பகுதியில் ரூ.2 லட்சம் பணத்தை படேலிடம் கொடுத்து அனுப்பினர். இந்த பணத்தை வைரல் படேலிடம் இருந்து அக்ஷய் ஜெயந்த் கரஞ்சவ்கர் மற்றும் சுஷாந்த் சஞ்சய் ஆகிய இருவரும் வாங்கிய போது, அங்கு மறைந்திருந்த போலீசார் அவர்களைச் சுற்றி வளைத்து அதிரடியாக கைது செய்தனர்.

முதற்கட்ட விசாரணையில், கைது செய்யப்பட்ட கரஞ்சவ்கர் ஏற்கனவே, தானே மாநகராட்சியில் நடந்த ஒரு லஞ்ச ஊழல் வழக்கிலும் தொடர்புடையவர் என்பது தெரியவந்தது.

# கூகுள் பிளே ஸ்டோரில் சாட்ஜிபிடியை முந்திய இந்தியன் ஆயில் நிறுவனம்

**புதுடெல்லி, மார்ச் 17:**

ஈரான் - அமெரிக்கா போரால் சர்வதேச அளவில் எரிபொருள் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. ஹார்முஸ் ஜலசந்தியை மூடியதால் அந்த வழியாக எண்ணெய் கப்பல்கள் செல்ல முடியாத நிலை உள்ளது. இந்தியா தனது எரிபொருள் தேவைக்கு பெரிதும் இறக்குமதியை நம்பியுள்ளது. இதனால், ஈரான் - அமெரிக்கா போரால் இந்தியாவில் எரிவாயு பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.

வணிக சிலிண்டர்கள் தட்டுப்பாடு நிலவுவதால் ஹோட்டல்கள் பலவும் மூடும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளன. வீட்டு சமையல் எரிவாயு சிலிண்டர் கிடைத்தாலும் மக்கள் அச்சத்தில் அதிக அளவில் புக்கிங் செய்ய ஆரம்பித்துள்ளனர். செல்போன் எண் மூலமாக புக் செய்ய முடியவில்லை எனக் கூறி ஆயில் நிறுவனங்களின் செயலியை பதிவிறக்கம் செய்து புக்கிங் செய்யத் தொடங்கினர். இதனால், கூகுள் பிளே ஸ்டோரில் அதிகம் டவுன்லோடு செய்யப்பட்ட செயலிகள் பட்டியலில் இந்தியன் ஆயில் நிறுவனத்தின் இந்தியன் ஆயில் ஒன் செயலி முதலிடம் பெற்றுள்ளது.




## மருத்துவமனையில் செல்போன் திருடிய 2 பேர் மீது பொதுமக்கள் தாக்குதல்



**சென்னை, மார்ச்.17:** கடலூர் மாவட்டம், விருத்தாசலம் பகுதியைச் சேர்ந்தவர் ரவிக்குமார் (35). உடல் நலக்குறைவு காரணமாக, சென்னை ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு உள் நோயாளியாக சிகிச்சை பெற்று வருகிறார்.

ரவிக்குமார் நேற்றுமுன்தினம் அதிகாலை மருத்துவமனையில் தூங்கிக் கொண்டிருந்தபோது திடீரென சத்தம் கேட்டு எழுந்து பார்த்தபோது, அவர் அருகில் வைத்திருந்த செல்போனை, 2 பேர் திருடிக் கொண்டு தப்பி ஓடினர். இதைப் பார்த்த ரவிக்குமார் உடனடியாக கூச்சலிட்டார்.

அவரது சத்தம் கேட்டு அருகிலிருந்தவர்கள் தப்ப முயன்ற இருவரையும் மடக்கிப் பிடித்து தர்ம அடி கொடுத்தனர். பின்னர், அவர்களை ராஜீவ்காந்தி அரசு பொது மருத்துவமனை காவல் நிலையத்தில் ஒப்படைத்தனர்.

பிடிபட்டவர்கள் வேலூர் மாவட்டம் அணைக்கட்டு பகுதியைச் சேர்ந்த வினோத்குமார் (35), சென்னை புளியந்தோப்பைச் சேர்ந்த ஜாகீர் உசேன் (52) என்பது தெரிந்தது.

செல்போன்கள் பறிமுதல்

இதையடுத்து, இருவரையும் போலீஸார் கைது செய்து சிறையில் அடைத்தனர். முன்னதாக, அவர்களிடமிருந்து 3 செல்போன்கள் பறிமுதல் செய்யப்பட்டன.

## காஸ் சிலிண்டர் வெடித்து 2 குழந்தைகள் உயிரிழப்பு: சிறுவன் உள்ளிட்ட 7 பேர் மருத்துவமனையில் அனுமதி

**செங்கல்பட்டு, மார்ச்.17:** கேளம்பாக்கம் அருகே நாவலூரில் சாமுண்டீஸ்வரி நகர் உள்ளது. இதில் 2-வது தெருவில் அதே ஊரைச் சேர்ந்த சங்கர் என்பவருக்கு சொந்தமான 3 வீடுகள் உள்ளது. இதில் தனித்தனி குடும்பத்தினர் வாடகைக்கு குடியிருந்து வருகின்றனர்.

ஒரு குடியிருப்பில் முருகன் (55) என்பவரும், அடுத்த குடியிருப்பில் வைரமுத்து (40) என்பவர் தனது மனைவி செல்வி (40), மகன் பிரதீப் (7) ஆகியோருடன் வசிக்கிறார்.

மற்றொரு குடியிருப்பில் சஞ்சீவ் குமார் (31), மனைவி சோனியா (27), மாமியார் சித்ரா (46), மைத்துனி சுதா, மகள் கிருஷிகா, மகன் தீரன் ஆகியோருடன் வசித்து வருகிறார்.

இதில் வைரமுத்து என்பவர் ஓ.எம்.ஆர். சாலையில் உள்ள தனியார் மேன்சன்களில் உள்ளவர்களுக்கு உணவு சமைத்து கொடுக்கும் தொழில் செய்து வருகிறார். இதனால் வீட்டில் ஏராளமான காஸ் சிலிண்டர்களை வைத்திருப்பார்.

இந்நிலையில் நேற்று காலை சுமார் 7.30 மணியளவில் வைரமுத்து வீட்டில் அனைவரும் தூங்கிக் கொண்டு இருந்தபோது, காஸ் கசிவு வாசனை வந்ததால் வைரமுத்துவின் மனைவி செல்வி எழுந்து மின் விளக்கை போட்டுள்ளார். அப்போது பலத்த சத்தத்துடன் சிலிண்டர் வெடித்துச் சிதறியது.


இதில் அவர்களின் வீடு முழுவதுமாக இடிந்து வைரமுத்துவின் மகன் பிரதீப் உடல் முழுவதும் கருகிய நிலையில் வெளியே ஓடி வந்தான். பக்கத்து குடியிருப்பில் தூங்கிக் கொண்டிருந்த சஞ்சீவ்குமார் (30), அவரது மனைவி சோனியா (28), மகள் கிருஷிகா (4), மகன் தீரன் (ஒன்றரை வயது), மாமியார் சித்ரா (55) ஆகியோர் கட்டிட இடிபாடுகளுக்குள் சிக்கிக் கொண்டனர்.

முன் குடியிருப்பில் இருந்த முருகனும் இடிபாடுகளில் சிக்கி உயிருக்கு போராடினார். பயங்கர சத்தம் கேட்டு அக்கம் பக்கத்தில் இருந்தவர்கள் ஓடி வந்து பார்த்தபோது சிறுவன் பிரதீப் தீக்காயங்களுடன் வெளியே வந்தான்.

மற்றவர்கள் இடிபாடுகளுக்குள் இருந்து மீட்கப்பட்டனர். இதில் உடல் நசுங்கி சஞ்சீவ்குமாரின் மகள் கிருஷிகா (4), மகன் தீரன் (ஒன்றரை வயது) ஆகியோர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர்.

இதையடுத்து சிறுசேரி தீயணைப்பு மற்றும் மீட்புப் படையினர் உடல்களை மீட்டனர். மேலும், பலத்த காயங்களுடன் உயிருக்கு போராடிய மற்ற 7 பேரும் மீட்கப்பட்டு ஆம்புலன்ஸ் மூலம் படூர் தனியார் மருத்துவமனைக்கும், செங்கல்பட்டு அரசு மருத்துவமனைக்கும் அனுப்பி வைக்கப்பட்டனர். தகவல் அறிந்து வந்த தாழம்பூர் போலீஸார் சம்பவ இடத்துக்கு வந்து மீட்பு பணியில் ஈடுபட்டு. பின்னர், வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

## மருத்துவ கல்லூரியில் சீட் வாங்கித் தருவதாக ரூ.11 லட்சம் மோசடி செய்த ரியல் எஸ்டேட் அதிபர் சிறையிலடைப்பு



**சென்னை, மார்ச்.17:** மடிப்பாக்கம், ராம்நகர் வடக்கு, 3-வது தெருவைச் சேர்ந்தவர் அபர்ணா (43). இவருக்கு முகநூல் மூலம் கடந்தாண்டு திருநெல்வேலி டவுண் பகுதியைச் சேர்ந்த ஸ்ரீராம் கமல் (33) என்பவர் அறிமுகமானார்.

இவர் தனக்கு அரசு அதிகாரிகள் மட்டுமல்லாமல் அரசியல்வாதிகளையும் நன்கு தெரியும் என்றும், தான் நினைத்தால் மருத்துவக் கல்லூரிகளில் சீட் மற்றும் அரசு வேலைகளை கூட வாங்கித் தர முடியும் எனவும் தெரிவித்துள்ளார். இதை உண்மையென நம்பிய அபர்ணா தனது மகனுக்கு தனியார் மருத்துவக் கல்லூரியில் சீட் வாங்கித் தர வேண்டும் என கேட்டுக் கொண்டுள்ளார். மேலும் கமிஷனாக ரூ.11 லட்சம் கொடுத்துள்ளார்.

பணத்தை பெற்றுக் கொண்ட ஸ்ரீராம் கமல், உறுதியளித்தபடி சீட் வாங்கிக் கொடுக்கவில்லை. பெற்ற பணத்தையும் திரும்பக் கொடுக்கவில்லையாம்.

இதுகுறித்து அபர்ணா மடிப்பாக்கம் காவல் நிலையத்தில் புகார் அளித்தார். அதன்படி போலீஸார் வழக்குப் பதிந்து விசாரித்தனர். இதையடுத்து ஸ்ரீராம் கமல் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.

முன்னதாக நடத்தப்பட்ட விசாரணையில், ஸ்ரீராம் கமல் ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருவதும், இவர் மீது ஏற்கெனவே இதே போன்றதொரு வழக்கு மதுரை மாவட்டம், அண்ணாநகர் காவல் நிலையத்தில் உள்ளதும் தெரியவந்ததாக போலீஸார் தெரிவித்தனர்.

# படிப்பு முக்கியம்... 108 ஆம்புலன்ஸில் வந்து 10ம் வகுப்பு பொதுத்தேர்வு எழுதிய மாணவர்



**சென்னை, மார்ச்.17:** சென்னை ஈக்காட்டுத்தாங்கல் தனியார் பள்ளியில் 108 ஆம்புலன்ஸில் வந்து மாணவர் ஒருவர் 10ம் வகுப்பு பொதுத்தேர்வு எழுதிய சம்பவம் அனைவரையும் நெகிழ்ச்சியடைய செய்துள்ளது.

சென்னை ஈக்காட்டுத்தாங்கல் உள்ள இசிஐ பள்ளியில் 10 வகுப்பு படித்து வரும் மாணவர்(ரிஷிகேஷ்), அசோக் நகரில் உள்ள லிட்டில் பிளவர் பள்ளியில் பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வு எழுதி வந்தார்.

கடந்த 11-ஆம் தேதி தமிழ் தேர்விற்கு சென்றிருந்த மாணவருக்கு திடீரென வயிற்று வலி ஏற்பட்டு, பெரும் அவதி அடைந்துள்ளார். அந்த தேர்வு முடித்துவிட்டு வீட்டுக்கு வந்த மாணவர் உடனடியாக கிண்டியில் உள்ள அரசு உயர் சிறப்பு மருத்துவமனைக்கு அழைத்து செல்லப்பட்டார்.

அங்க பரிசோதித்த மருத்துவர்கள் மாணவனுக்கு குடல்வால் அழற்சி (அப்பன்டிக்ஸ்) பாதிப்பு இருப்பது தெரியவந்தது. இதையடுத்து கடந்த 12-ம் தேதி மாணவருக்கு அப்பெண்டிக்ஸ் அறுவை சிகிச்சை செய்யப்பட்டது. அதன்பிறகு தற்போதும் மருத்துவ சிகிச்சையில் இருந்து வருகிறார்.

இந்த நிலையில் ஆங்கில தேர்வு இன்று நடைபெற்றது. அறுவை சிகிச்சை செய்யப்பட்ட மாணவர் மருத்துவ கண்காணிப்பிலேயே இருந்து வருவதால் அவர் இன்று தேர்வு எழுதுவது சிக்கலாக மாறியது.

மருத்துவமனையில் இருந்து தேர்வு மையத்திற்கு சென்று தேர்வு எழுதிவிட்டு மீண்டும் மருத்துவமனைக்கு வந்து சிகிச்சை பெறுவது என பெற்றோர் முடிவு செய்தனர்.

அதன்படி கிண்டியில் உள்ள அரசு உயர் சிறப்பு மருத்துவமனையில் இருந்து இன்று காலை ஆம்புலன்சில் புறப்பட்டு தேர்வு மையத்திற்கு செல்ல ஏற்பாடு செய்யப்பட்டது. காலை 9.30 மணி அளவில் மருத்துவமனையில் இருந்து தேர்வு மையத்திற்கு ஆம்புலன்ஸில் புறப்பட்டார். 10 நிமிடங்களில் ஆம்புலன்ஸ் தேர்வு மையத்தை வந்து சேர்ந்தது. அங்கு அவருக்கு தேர்வு எழுத சிறப்பு ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது.. மாணவருக்கு உதவுவதற்காக அரசு தேர்வுகள் துறை சார்பில் சொல்வதை எழுதுவோர் நியமிக்கப்பட்டனர். ஆசிரியரின் கேள்விகளுக்கு மாணவர் சொல்லிய பதிலை விடையாக ஆசிரியர் எழுதினார்.

மூன்று மணி நேரம் தேர்வு நடைபெற்று முடிந்தது. அதன் பின்னர் மீண்டும் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். சென்னையில் அறுவைசிகிச்சை செய்து கொண்ட மாணவர் ஆம்புலன்ஸ் வாகனத்தில் சென்று தேர்வு எழுதியது பலரது கவனத்தையும் ஈர்த்துள்ளது.

# “தந்தை - மகன் பிரச்சினை நாளை சரியாகலாம்...” - பாமக பெயர், சின்னம் வழக்கில் ஐகோர்ட் கருத்து



**சென்னை, மார்ச்.17:** “தேர்தல் தேதி அறிவிக்கப்பட்டு விட்டது, என்ன செய்யப்போகிறீர்கள் ? தந்தை மகன் பிரச்சினை நாளை சரியாகலாம். ஆனால் கட்சியை வைத்து தான் வழக்கில் முடிவெடுக்க முடியும்,” என உயர்நீதிமன்ற நீதிபதி கருத்து தெரிவித்துள்ளார்.

பாமக-வின் பெயர், சின்னம் பயன்படுத்த அன்புமணிக்கு தடை விதிக்க வேண்டும், பாமக தலைவர் எனக் குறிப்பிட்டு தேர்தல் ஆணையம் சின்னம் ஒதுக்கீடு செய்த கடிதம் தொடர்பாக உத்தரவை ரத்து செய்து தன்னை பாமக தலைவராக அறிவிக்க வேண்டும் எனக் கோரி பாமக நிறுவனர் ராமதாஸ் தரப்பில் சென்னை உரிமையியல் நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்திருந்தார்.

இந்த வழக்கை நிராகரிக்க வேண்டும் என அன்புமணி தரப்பில் மனுத் தாக்கல் செய்யப்பட்டது.

மேலும் பாமக கட்சியின் பொதுச்செயலாளர் வடிவேல் ராவணன் தன்னையும் வழக்கில் இணைக்க வேண்டும் என மனுத் தாக்கல் செய்திருந்தார்.

இந்த நிலையில், பாமக கட்சியின் பொதுச்செயலாளர் வடிவேல் ராவணன் சென்னை உயர் நீதிமன்றத்தில் அவசர மனு ஒன்றை தாக்கல் செய்திருந்தார்.

அதில், கட்சியின் பொதுச்செயலாளரான தன்னை வழக்கில் இணைக்க உரிமையியல் நீதிமன்றம் மறுத்து விட்டது என்பதால் உரிமையியல் நீதிமன்றத்தில் ராமதாஸ் தொடர்ந்த வழக்கின் விசாரணைக்கு தடை விதிக்க மனுவில் கோரியிருந்தார்.

இந்த வழக்கை விசாரித்த நீதிபதி தமிழ்செல்வி, உரிமையியல் நீதிமன்ற வழக்கு விசாரணைக்கு இடைக்கால தடை விதித்தும், ராமதாஸ் உள்ளிட்டோர் பதிலளிக்க உத்தரவிட்டு வழக்கின் விசாரணையை ஏப்ரல் 10-ம் தேதிக்கு தள்ளி வைத்தார்.

இந்த நிலையில் ராமதாஸ் தரப்பு வழக்கறிஞர்கள் சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி தமிழ்செல்வி முன்பு ஆஜராகி, ”தங்கள் தரப்பில் கேவியேட் மனு தாக்கல் செய்த நிலையில் இந்த தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றும் எனவே தடையை நீக்கக் கோறும் மனுவை விசாரிக்க வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டனர்.

இந்த மனு இன்று விசாரணைக்கு வந்தபோது நீதிபதி, தேர்தல் தேதி அறிவிக்கப்பட்டு விட்டது என்ன செய்யப்போகிறீர்கள் ?. தந்தை - மகன் பிரச்சினை நாளை சரியாகலாம்.

ஆனால் கட்சியை வைத்து தான் வழக்கில் முடிவெடுக்க முடியும்” என்று கருத்து தெரிவித்தார்.

தொடர்ந்து, பாமக பொதுச்செயலாளர் வடிவேல் ராவணை வழக்கில் இணைத்தால் என்ன பிரச்சினை என கேள்வி எழுப்பி நீதிபதி, ஆவணங்களை எதிர் மனுதாரர் வழங்கக் கோரி அன்புமணி தாக்கல் செய்த வழக்கையும் (மார்ச் 17ம் தேதி) நாளை விசாரிக்கப்படும் என கூறி வழக்கை ஒத்திவைத்து உத்தரவிட்டுள்ளார்.

# கரூரில் பறக்கும் படை, நிலையான கண்காணிப்புக் குழு தீவிர சோதனை!

**கரூர், மார்ச்.17:** : கரூரில் பறக்கும் படை, நிலையான கண்காணிப்புக் குழு சோதனைப் பணிகளை தொடங்கி மேற்கொண்டு வருகின்றன. மக்கள் கூடும் பொது இடங்களில் ஒட்டப்பட்டுள்ள சுவரொட்டிகளை தூய்மைப் பணியாளர்கள் அகற்றும் பணிகள் முடுக்கிவிடப்பட்டுள்ளது.

தமிழகத்தில் ஏப்.23-ம் தேதி தேர்தல் நடைபெறுகிறது. தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமலுக்கு வந்ததால் தொகுதி வாரியாக பறக்கும் படை, நிலையான கண்காணிப்புக் குழு உள்ளிட்டவைகள் நியமனம் செய்யப்பட்டு அறிவிக்கப்பட்டன.

இன்று (மார்ச் 16ம் தேதி) காலை 7 மணியளவில் கரூர் மாவட்ட சட்டப்பேரவைத் தொகுதிக்குட்பட்ட கரூர்- திருச்சி நெடுஞ்சாலையில் காந்தி கிராமம் பூங்கா பகுதியில் பறக்கும் படையினர், திண்ணப்பா நகர் அருகேயுள்ள புனித தெரசா பெண்கள் மேல்நிலைப் பள்ளி அருகே நிலையான கண்காணிப்புக் குழுவினர் வாகன சோதனைகளை மேற்கொண்டனர்.

இப்பள்ளி அருகேயுள்ள பயணியர் காத்திருப்புக் கூடத்தில் ஒட்டப்பட்டிருந்த சுவரொட்டிகள், அழகப்பா நகர் பகுதியில் சாலை மையத்தடுப்பில் ஒட்டப்பட்டிருந்த சுவரொட்டிகளை தூய்மைப் பணியாளர்கள் அகற்றும் பணியில் ஈடுபட்டனர்.


மேலும், மாவட்டம் முழுவதும் உள்ள 4 தொகுதிகளிலும் பறக்கும் படையினர், நிலையான கண்காணிப்புக் குழுவினர் வாகன சோதனை மேற்கொண்டு வருகின்றனர். உள்ளாட்சி அமைப்புகளை சேர்ந்த தூய்மைப் பணியாளர்கள் சுவரொட்டிகளை அகற்றும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

ரூ.1 லட்சம் பறிமுதல்: கரூர் மாவட்டம் குளித்தலை அருகே கரூர் திருச்சி நெடுஞ்சாலையில் மருதூர் சுங்கச்சாவடி அருகே தேர்தல் பறக்கும் படையினர் நேற்றிரவு வாகன சோதனையில் ஈடுபட்டனர்.

அப்போது அவ்வழியாக வந்த காரை நிறுத்தி சோதனையிட்ட போது திருச்சி மாவட்டம் முசிறியை சேர்ந்த ரவிச்சந்திரன் மனைவி சாரதா (55) கைப்பையில் உரிய ஆவணங்களின்றி ரூ.1 லட்சம் வைத்திருந்தது தெரியவந்தது. டெல்லியில் இருந்து திருச்சி விமான நிலையத்திற்கு தன் குடும்பத்தினருடன் வந்தவர் விமான நிலையத்தில் இருந்து முசிறி நோக்கி காரில் சென்றப்போது சோதனையில் சிக்கியது தெரியவந்தது.

பணத்தை பறிமுதல் செய்த பறக்கும் படையினர் குளித்தலை தேர்தல் நடத்தும் அலுவலரான சார் ஆட்சியர் சுவாதிஸ்ரீயிடம் ரூ.1. லட்சத்தை ஒப்படைத்தனர். அத்தொகை சார் நிலை கருவூலத்தில் செலுத்தப்பட்டது.

# திருப்பூரில் இருவேறு இடங்களில் உரிய ஆவணங்கள் இல்லாத ரூ. 41 லட்சம் பறிமுதல்



**திருப்பூர், மார்ச்.17:** திருப்பூரில் இருவேறு இடங்களில் உரிய ஆவணங்கள் இன்றி எடுத்துச்செல்லப்பட்ட ரூ. 41 லட்சம் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமலுக்கு வந்த நிலையில் திருப்பூர் மாவட்டத்தில் எட்டு சட்டமன்ற தொகுதிகளில் 72 தேர்தல் பறக்கும் படையினர் மற்றும் 72 நிலை கண்காணிப்பு குழுவினர் தீவிரசாதனையில் ஈடுபட்டு வருகின்றனர். அந்த வகையில் திருப்பூர் மாநகராட்சிக்கு உட்பட்ட அவிநாசி சாலை மேம்பாலம் அருகே பறக்கும் பட்டையினர் தீவிர வாகன சோதனையில் ஈடுபட்டிருந்தனர். அப்போது அந்த வழியாக வந்த இருசக்கர வாகனத்தை நிறுத்தி சோதனை மேற்கொண்ட போது, இருசக்கர வாகனத்தில் வந்த பங்கஜ் என்பவர் அணிந்திருந்த பேக்கில் ரூ.35 லட்சம் பணம் இருப்பது தெரியவந்தது.

அதற்கான ஆவணங்கள் ஏதும் இல்லாததால் பறக்கும் படையினர் அந்தப் பணத்தை கைப்பற்றி, வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்திற்கு கொண்டு சென்று ஒப்படைத்தனர். இதுகுறித்து நடத்திய விசாரணையில், பங்கஜ் என்பவர் பெங்களூரில் இருந்து ரயில் மூலம் திருப்பூர் வந்ததும் திருப்பூரில் பேப்ரிக் கொள்முதல் செய்வதற்காக அந்த பணத்தை கொண்டு வந்ததாகவும் தெரிய வந்துள்ளது. இருப்பினும் அதற்கான ஆவணங்கள் இல்லாத காரணத்தால் தேர்தல் அலுவலர்கள் அதனை மாவட்ட கருவூலத்தில் ஒப்படைத்தனர். உரிய ஆவணங்கள் காட்டி பணத்தை பெற்று செல்லுமாறு அறிவுறுத்தி உள்ளனர்.

இதேபோல் குமரன் சாலையில் வாகன தணிக்கையின் போது பொள்ளாச்சியைச் சேர்ந்த கார்த்திகேயன் என்பவரது வாகனத்தை சோதனை செய்தனர். ஊடகம் என ஒட்டப்பட்டு இருந்த வாகனத்தில் மேற்கொள்ளப்பட்ட சோதனைகள் உரிய ஆவணங்கள் இல்லாமல் ரூ.6 லட்சம் இருந்தது தெரிய வந்தது. அவற்றை தேர்தல் பறக்கும் படையினர் பறிமுதல் செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமலுக்கு வந்த நிலையில் திருப்பூர் மாநகரில் ஒரே நேரத்தில் இரு வேறு பகுதிகளில் ரூ. 41 லட்சம் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# வீட்டு உபயோக காஸ் சிலிண்டர் விவகாரம்: மக்கள் பீதி அடைய வேண்டாம் என எண்ணெய் நிறுவனங்கள் அறிவுறுத்தல்



**சென்னை, மார்ச்.17:** வீட்டு உபயோக காஸ் சிலிண்டர் விசயத்தில் மக்கள் எவ்வித பீதியும் அடைய வேண்டாம் என எண்ணெய் நிறுவனங்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மத்திய கிழக்கு நாடுகளில் நடைபெறும் போரால், இந்தியாவில் காஸ் சிலிண்டர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. குறிப்பாக வணிகப் பயன்பாட்டுக்கான காஸ் விநியோகம் பெரிய அளவில் பாதிக்கப்பட்டுள்ளதால், பல இடங்களில் உணவகங்கள் மூடப்பட்டுள்ளன.

பல இடங்களில் உணவுப் பட்டியல் குறைக்கப்பட்டுள்ளன. வணிக சிலிண்டர் பாதிப்பு இருக்கும் நிலையில், வீட்டு உபயோக சிலிண்டர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும் என மத்திய அரசு அறிவித்து, சிலிண்டரை அத்தியாவசிய பட்டியலுக்குள் கொண்டு வந்துள்ளது.

இருப்பினும், பொதுமக்கள் அச்சமடைந்து உள்ளனர். இந்நிலையில், வீட்டு உபயோக காஸ் சிலிண்டர் விசயத்தில் மக்கள் எவ்வித பீதியும் அடைய வேண்டாம் என்ற எண்ணெய் நிறுவனங்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. பாரத் பெட்ரோலிய நிறுவனம் வெளியிட்ட அறிவிப்பில், “மக்கள் பீதி அடையத் தேவையில்லை. எல்பிஜி விநியோகம் மற்றும் சேவைகள் தொடர்ந்து வழக்கம் போல இயங்குகின்றன.


வாடிக்கையாளர்களை ஆதரிப்பதற்கும், சீரான செயல்பாடுகளை உறுதி செய்வதற்கும், ஏற்கெனவே 16.67 சதவீதம் பணியாளர்களை எங்கள் நிறுவனம் அதிகரித்துள்ளது, மேலும் 28.5 சதவீதம் பணியாளர்களை அதிகரிக்கும் நடவடிக்கை நடைபெறுகிறது.

விரைவான முன்பதிவு செய்யவும், புகார்களுக்கு தீர்வு காணவும் வாடிக்கையாளர் அழைப்பு மையம் மேம்படுத்தப்பட்டுள்ளது” என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஹிந்துஸ்தான் பெட்ரோலியம் நிறுவன அறிவிப்பில், மக்கள் அவசரப்படவோ அல்லது பீதி அடையவோ தேவையில்லை.

பதுக்கல் மற்றும் கள்ளச் சந்தைப்படுத்தலைத் தடுக்கவும், அனைத்து நுகர்வோருக்கும் எல்பிஜி நியாயமான மற்றும் சரியான நேரத்தில் கிடைப்பதை உறுதி செய்யவும் முன்பதிவு கால இடைவெளி 25 நாட்களாக உள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மாசி ப்ரம்மோத்ஸவம்



மேற்கு மாம்பலம் - ஸ்ரீ பாஷ்யகார ஸ்ரீ செங்கமலவல்லி நாயிகா ஸமேத சென்ன ஸ்ரீ ஆதிகேசவப் பெருமாள் திருக்கோயில் விசுவாவசு வருஷ மாசி ப்ரம்மோத்ஸவம். ஒன்பதாம் நாள் மாலை ஸ்ரீ பெருமாள்- புண்ணியக் கோட்டி விமானம்

# 12 ஆண்டுகளுக்கு பிறகு முல்லைப்பெரியாறு அணையில் தமிழன்னை படகுக்கு அனுமதி




**கூடலூர், மார்ச்.17:** கேரளா அரசால் 12 ஆண்டுகளாக தடுத்து நிறுத்தி வைக்கப்பட்ட தமிழன்னை படகு பயன்பாட்டிற்கு வந்தது.

பெரியாறு அணையில் தமிழக பொதுப்பணித்துறை சார்பில் இயக்கப்பட்ட நான்கு படகுகளில் ப்ளூ பெல், மங்கையர்க்கரசி ஆகிய 2 படகுகளும் செயல் இழந்துவிட்ட நிலையில், தற்போது 27 குதிரை திறன் கொண்ட ஜலரத்னா, கண்ணகி ஆகிய இரண்டு படகுகள் மட்டுமே பயன்படுத்தப்பட்டு வருகிறது. 2014ம் ஆண்டு தமிழக பொதுப்பணித்துறையினர் பராமரிப்பு கண்காணிப்பு பணிக்காக பயன்பாட்டுக்காக கொண்டுவரப்பட்ட 130 எச்.பி.திறன், இரண்டு டன் எடை வரை பொருட்களை எடுத்துச் செல்லும் வகையில் அமைக்கப்பட்ட ஸ்டீல் போட்டான தமிழன்னை படகை பல்வேறு தொழில்நுட்ப காரணங்களை கூறி அதனை இயக்க விடாமல் கேரளா அரசு தடுத்து வந்தது.

இதனையடுத்து, கடந்த 12 ஆண்டுகளாக தமிழன்னை படகு இயக்கப்படாமல் தேக்கடி படகுத்துறையில் நிறுத்தப்பட்டது. ஆனால் கேரள அரசின் சுற்றுலாத்துறை, நீர் வளத்துறை மற்றும் காவல் துறை உள்ளிட்ட துறைகள் சார்பில் பெரியாறு அணையில் 19 படகுகள் இயக்கப்பட்டு வருகின்றன. தமிழன்னை படகை இயக்க விடாமல் கேரளா அரசு தடுத்து வந்ததை கண்டித்து தமிழகத்தில் உள்ள பல்வேறு விவசாய சங்கங்கள் போராட்டங்களில் ஈடுபட்டு வந்தன.

தமிழ்நாடு அரசின் பல்வேறு முனைகளில் நடைபெற்ற முன்னெடுப்புகள் காரணமாக, கேரளா அரசின் ஒப்புதலோடு நேற்றுமுன்தினம் படகை பயன்பாட்டிற்கு கொண்டு வருவது தொடர்பாக சோதனை ஓட்டம் நடத்தப்பட்டது. இதில், தமிழக பொதுப்பணித்துறை அதிகாரிகள் தமிழன்னை படகை பெரியாறு அணையில் இயக்கி ஆய்வு செய்தனர். இதில், அணை நீர் மட்டம், நில அதிர்வை கண்டறியும் சீஸ்மோகிராப், மழைமானி, காற்றின் வேகம் கண்டறியும் கருவி ஆகியவற்றின் இயக்கங்கள் குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. தொடர்ந்து மெயின் அணை, பேபி அணை, கேலரி பகுதி, ஷட்டர், மண் அணை ஆகியவற்றையும் பார்வையிட்டனர். தலைமைப் பொறியாளர் தலைமையில் நடைபெற்ற இந்த ஆய்வில் பெரியாறு அணை சிறப்பு கோட்ட (கம்பம்) செயற்பொறியாளர் செல்வம், எஸ்.டி.ஓ. ராஜகோபால் உள்ளிட்ட பொறியாளர்கள் கலந்து கொண்டனர்.

தமிழ்நாடு அரசு பல்வேறு முனைகளில் எடுத்துள்ள முன்னெடுப்பு காரணமாக கடந்த 2025 ஆகஸ்ட் மாதம் மேலும் ஒரு புதிய படகை அணையில் இயக்குவதற்கு கேரளா அரசு ஒப்புதல் அளித்திருந்தது. இந்நிலையில், புதிய படகிற்கும் தமிழக அரசு விரைவில் நிதி ஒதுக்கி அந்தப்படகும் அணையில் கொண்டு வரப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# அரசு மருத்துவமனையில் தீ விபத்து: பிறந்து சில மணி நேரமே ஆன பச்சிளம் குழந்தைக்கு தீக்காயம்

**சென்னை, மார்ச்.17:** அரசு மருத்துவமனையில் ஏற்பட்ட தீ விபத்தால், பிறந்து சில மணி நேரமே ஆன பச்சிளம் குழந்தைக்கு தீக்காயம் ஏற்பட்டிருக்கும் சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

சென்னை பெரம்பூர் பகுதியைச் சேர்ந்தவர்கள் ஆனந்த்பாபு - தனலட்சுமி தம்பதியினர். ஆனந்த்பாபு மருந்து பொருட்கள் விற்பனை செய்யும் நிறுவனத்தில் பணிபுரிந்து வருகிறார்.

திருமணமாகி 3 ஆண்டுகள் ஆன நிலையில் கர்ப்பமாக இருந்த தனலட்சுமி, பிரசவ தேதி தாண்டியதை அடுத்து, புரசைவாக்கத்தில் இயங்கி வரும் மாநகராட்சி 24 மணி நேர அவசர மகப்பேறு மருத்துவமனைக்கு பரிசோதனைக்காக நேற்று முன்தினம் வந்தார்.

அவரைப் பரிசோதித்த மருத்துவர்கள், தனலட்சுமியை உடனடியாக அறுவை சிகிச்சை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தி, மருத்துவமனையில் சேர்த்தனர்.

ரேடியன்ட் வார்மர் பெட்டி

அங்கு தனலட்சுமிக்கு நேற்று சிசேரியன் மூலம் ஆண் குழந்தை பிறந்தது. பிறந்த குழந்தையை சுத்தம் செய்து அதன் உடல் வெப்பநிலையைப் பராமரிக்க மருத்துவர்கள் 'ரேடியன்ட் வார்மர்' பெட்டியில் குழந்தையை வைத்திருந்தனர்.

இந்நிலையில் வார்மரில் ஏற்பட்ட திடீர் மின்கசிவு காரணமாக, குழந்தை வைக்கப்பட்டிருந்த பெட்டி தீப்பற்றி எரியத் தொடங்கியது. இதைக் கண்டு அதிர்ச்சியடைந்த அங்கிருந்த செவிலியர்கள் குழந்தையை அதிலிருந்து எடுக்க முயன்றனர்.

ஆனால் சில நொடிகளில் பரவிய தீயால், குழந்தையின் முதுகு மற்றும் தொடை பகுதிகளில் பலத்த தீக்காயங்கள் ஏற்பட்டதாக தெரிகிறது. பின்னர் அந்த பெட்டியிலிருந்து மீட்கப்பட்ட குழந்தை மேல் சிகிச்சைக்காக எழும்பூரில் உள்ள குழந்தைகள் நல அரசு மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

அங்கு குழந்தையின் தீக்காயத்துக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இந்த தீ விபத்து குறித்து வேப்பேரி போலீஸார் விசாரித்து வருகின்றனர்.

மருத்துவமனையில் உள்ள மின் சாதனங்களின் தரக் கட்டுப்பாடு மற்றும் பராமரிப்பு குறைபாடே இந்த விபத்துக்குக் காரணம் என குழந்தையின் பெற்றோரும், உறவினர்களும் குற்றஞ்சாட்டி வருகின்றனர்.

பிறந்து சில மணி நேரமே ஆன குழந்தைக்கு, மருத்துவமனையிலேயே ஆபத்து நேர்ந்திருப்பது பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

# சவுதி அல் கசிம் புரைதாவில் மரணித்த தமிழரின் உடலை தாயகம் அனுப்பி வைத்த இந்தியன்ஸ் வெல்ஃபேர் ஃபோரம்

சவுதி அரேபியா அல் கசிமண்டலம் புரைதாவில் ராமநாதபுரம் மாவட்டம், கடலாடி வட்டம் சிக்கலை அடுத்துள்ள ஆய்குடியைச் சேர்ந்த முனியசாமி ஆண்டி என்ற சகோதரர் உடல்நிலை சரியில்லாமல் புரைதா மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்து விட்டார்கள்.



அவர்களின் உடலை தாயகம் அனுப்பித் தர வேண்டும் என்று மனிதநேய மக்கள் கட்சியின் மாநில தலைமை பிரதிநிதி சகோதரர் ஹுசைன் கனி அவர்கள் இந்தியன்ஸ் வெல்ஃபேர் ஃபோரம் அல் கசிம் மண்டல தலைவர் மங்களக்குடி பக்கீர்முஹைதீன் அவர்களிடம் கோரிக்கை வைத்தார்கள். உடனடியாக மண்டல தலைமை நிர்வாகிகளான திருச்சி ரிஸ்வான், மும்பை முஜீப்ரஹ்மான், மதுரை டாக்டர் ஆண்டோ, வடக்காத்தூர் முஹம்மது அன்சார், வடகரை ஹுஸைன் ஹஜரத், சிறு கடம்பூர் ஜாகிர் உசேன், நாகர்கோயில் அமீர் ஹுசைன் ஆகியோர்களை மங்கலக்குடி பக்கீர் மைதீன் தலைமையில் ஒருங்கிணைத்து.

முனியசாமி வேலை செய்த நிறுவனத்துடன் தொடர்பு கொண்டு அவருக்கு சேர வேண்டிய நிலுவைத் தொகைகளை பெற்று தூதரகத்தின் மூலம் தாயகத்திற்கு அனுப்பி வைத்துவிட்டு அவர்களின் உடலை அனுப்புவதற்கான ஆவணங்களை சரி செய்து நல்ல முறையில் அவர்களின் உடலை 14/3/2026 அன்று தாயகம் அனுப்பி வைத்தோம். அல்ஹம்துலில்லாஹ்.

இதற்காக பாடுபட்ட நிர்வாகிகள் அனைவருக்கும் ஒத்துழைப்பு வழங்கிய நிறுவனத்தார்களுக்கும் அனுசரணை வழங்கிய ரியாத் இந்திய தூதரக அதிகாரிகளுக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கின்றோம். உடலைப் பெற்றுக் கொண்டு அந்த குடும்பத்தினர் கண்ணீர் மல்க நன்றியை இந்தியன்ஸ் வெல்ஃபேர் ஃபோரம் அல்கசிம் மண்டல நிர்வாகிகளுக்கு தெரிவித்துக் கொண்டார்கள். என்றும் சமூக நலப் பணியில் இந்தியன் வெல்ஃபோர் ஃபோரம் அல் கசிம் மண்டலம் சவுதி அரேபியா.



ஆர் கே நகர் 1வது சர்க்கிள் பொறுப்பாளராக என்னை நியமனம் செய்த வடசென்னை கிழக்கு மாவட்ட தலைவர் திருமதி மதுரம்மா கனி பாரூக் அவர்களுக்கு ஆர் கே நகர் 1வது சர்க்கிள் சார்பாக சர்க்கிள் நிர்வாகிகள் மாவட்ட நிர்வாகிகள் வட்ட நிர்வாகிகள் அனைவரும் நன்றி தெரிவிக்கின்றோம் இந்த பொறுப்பாளர் பதவிக்கு பரிந்துரை செய்த அண்ணன் டி வி துரைராஜ் அவர்களுக்கும் வட சென்னை மாவட்ட நிர்வாகிகளுக்கும் சர்க்கிள் நிர்வாகிகளுக்கும் வட்ட நிர்வாகிகளுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கின்றேன்.

# சென்னை ஜானகி டூர் டிராவல்ஸ் சார்பில் தர்மசாஸ்தா ஐயப்பனுக்கு படி பூஜை

**சென்னை,மார்ச்.17:** சென்னை விருகம்பாக்கம் பகுதியில் உள்ள ஆன்மிக ஸ்தலங்களுக்கு பக்திமயத்துடன் அழைத்துசெல்லும் ஶ்ரீ ஜானகி டூர்ஸ் சார்பில் பங்குனி மாதம் முதல் நாள் முன்னிட்டு தர்ம சாஸ்தா ஐயப்பனுக்கு படி பூஜை வழிபாடு நடைபெற்றது. இதில் ஐயப்பனுக்கு மலர் அலங்காரம் செய்யப்பட்டு படி பூஜை வழிபாடு நடைபெற்றது.









இதில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டனர். அதை தொடர்ந்து ஜானகி டூர்ஸ் நிர்வாகி ரமேஷ் தலைமையில் ஏராளமான பக்தர்கள் சபரிமலை யாத்திரை சென்று ஐயப்பனை தரிசனம் செய்ய இருமுடி கட்டி புறப்பட்டனர். ஆன்மிக சுற்றுலா துறையில் சாதனை படைத்து வரும் ஸ்ரீ ஜானகி டூர்ஸ் டிரா வல்ஸ் நிறுவனத்தினை சிறப் பான முறையில் நடத்தி வரும் நிர்வாக இயக்குனர் ஸ்ரீபிரியா ரமேஷ் பக்தர்கள் அனைவரையும் வணங்கி வரவேற்றார்.

ஸ்ரீ ஜானகி டூர் டிராவல்ஸ் சார்பில் மாதந்தோறும் பிரதோஷ நாட்களில் முக்கிய சிவாலயங்கள், திருப்பதி பாலாஜி விஐபி தரிசனம், ஆறுபடை வீடு முருகன் ஸ்தலங்கள், கேரளா திவ்ய தேசம், அயோத்தி காசி, மற்றும் சீரடி சாயிபாபா, அகோபிலம் நரசிம்மர் கோவில் என தமிழகம் மட்டுமின்றி வெளி மாநிலத்தில் உள்ள ஆன்மிக ஸ்தலங்களுக்கு மிகவும் பாதுகாப்புடன் தங்கும்வசதி உயர் தர சைவ உணவு வகைகள் வழங்கி அழைத்து சென்று வருகிறது.

சுற்றுலா யாத்திரிகளுக்கு அனைத்து வசதிகளுடன் அளித்து ஆன்மிக சுற்றுலா பயணிகள் ஏகோபித்த ஆதரவை பெற்றுள்ளது. ஸ்ரீஜானகி டூர் டிராவல்ஸ் இயக்குனர்கள் ரமேஷ், ஸ்ரீபிரியா ரமேஷ் ஆகியோர் தெரிவித்தனர். ஆன்மிக யாத்திரை செல்ல 90942 79625 தொடர்பு கொள்ளலாம்.




# பாஜக, அதிமுக உள்பட யாருடனும் கூட்டணி பேச்சுவார்த்தை நடைபெறவில்லை: தவெக திட்டவட்டம்



**சென்னை, மார்ச்.17:** பாஜக, அதிமுக அல்லது சசிகலா, மருத்துவர் ராமதாஸை தமிழக வெற்றிக்கழகத்துடன் தொடர்புபடுத்தி கூட்டணி பேச்சுவார்த்தைகள் நடத்தப்படுவதாகக் கூறப்படும் தகவல்கள் முற்றிலும் உண்மைக்கு புறம்பானவை என தவெக இணை பொதுச் செயலாளர் சிடிஆர் நிர்மல் குமார் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் தனது எக்ஸ் தளத்தில், "வதந்திகளை நம்ப வேண்டாம். சமீபகாலமாக சில ஊடகங்களிலும், சமூக வலைதளங்களிலும் அரசியல் லாபத்திற்காக திட்டமிட்டு சில பொய்யான செய்திகள் பரப்பப்பட்டு வருகின்றன. குறிப்பாக, பாஜக, அதிமுக அல்லது சசிகலா, மருத்துவர் ராமதாஸை தமிழக வெற்றிக்கழகத்துடன் தொடர்புபடுத்தி கூட்டணி பேச்சுவார்த்தைகள் நடத்தப்படுவதாகக் கூறப்படும் தகவல்கள் முற்றிலும் உண்மைக்கு புறம்பானவை.

குறிப்பிட்ட கட்சிகள் மற்றும் அரசியல் தலைவர்களுடன் எந்தவிதமான பேச்சுவார்த்தை, எந்த மட்டத்திலும் நடைபெறவில்லை என்பதைத் திட்டவட்டமாகத் தெரிவித்துக் கொள்கிறோம். இதே போன்ற பொய்ச்செய்தி உத்தியை காங்கிரஸ் உள்ளிட்ட பல்வேறு அரசியல் கட்சிகளோடு தொடர்புபடுத்தியும் கடந்த காலங்களில் கடைபிடிக்கப்பட்டதும் அது உண்மை இல்லை என்பதும் அனைவரும் அறிந்த ஒன்று.

இருப்பினும் பொதுமக்களிடையேயும், தொண்டர்களிடையேயும் தொடந்து குழப்பத்தை விளைவிப்பதற்காகவே இத்தகைய ஆதாரமற்ற செய்திகள் திமுகவினரால் பரப்பப்படுகின்றன. பொறுப்புள்ள ஊடகங்கள் மற்றும் சமூக வலைதளப் பயனாளர்கள், செய்தியின் உண்மைத்தன்மையை ஆராயாமல் இத்தகைய வதந்திகளைப் பகிர வேண்டாம். வாய்மையே வெல்லும்!" இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# தி.மு.க.வுக்கு வெற்றி பிரகாசமாக உள்ளது - அமைச்சர் துரைமுருகன்

**சென்னை, மார்ச்.17:** சென்னை அண்ணா அறிவாலயத்தில் இன்று தி.மு.க. மாவட்ட செயலாளர்கள் கூட்டம் நடைபெற்றது. இதில் தி.மு.க. தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் உரையாற்றினார்.



கூட்டத்தில் பொதுச்செயலாளர் அமைச்சர் துரைமுருகன், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., அமைச்சர்கள் கே.என்.நேரு, ஐ.பெரியசாமி, மு.பெ.சாமிநாதன் மற்றும் எம்.பி.க்கள் கனிமொழி, திருச்சி சிவா, ஆ.ராசா, அந்தியூர் செல்வராஜ், பொன்முடி எம்.எல்.ஏ. ஆகியோர் கலந்து கொண்டனர்.

கூட்டம் முடிந்ததும் அமைச்சர் துரைமுருகன் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:-

நான் உடல்நிலை சரியில்லாத காரணத்தால் சில நாட்கள் ஓய்வில் இருந்தேன். இப்போது குணம் அடைந்து விட்டேன். இதனால் கட்சிப் பணியையும் தொடங்கிவிட்டேன். வருகிற சட்டசபை தேர்தலில் தி.மு.க.விற்கு வெற்றி பிரகாசமாக உள்ளது.

இவ்வாறு அவர் கூறினார்.

# தமிழகத்தில் போதை தாக்குதல்கள் வாடிக்கையாகி விட்டது: நயினார் நாகேந்திரன்

**சென்னை, மார்ச்.17:** "போதையின் வீரியத்தில் பார்ப்போர் மீதெல்லாம் தாக்குதல் தொடுப்பது தமிழகத்தில் வாடிக்கையாகிவிட்டது" என தமிழக பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன் தெரிவித்துள்ளார்.



இது குறித்து அவர் தனது எக்ஸ் தள்த்தில், "கடலூர் மாவட்டம் காட்டுமன்னார்கோவில் அரசு மருத்துவமனையின் பிரசவ வார்டிற்குள் புகுந்த கஞ்சா போதை ஆசாமிகள், அங்கு இருந்த நோயாளிகள் மற்றும் மருத்துவர்களை அரிவாளைக் காட்டி மிரட்டியுள்ள சம்பவம் கடும் அதிர்ச்சியளிக்கிறது.

அதிர்ஷ்டவசமாக அங்கிருந்த யாருக்கும் உடல்ரீதியான பாதிப்பு எதுவும் ஏற்படவில்லை என்பது சற்று ஆறுதல் அளித்தாலும், அரசு மருத்துவமனைக்குள் மக்களுக்கு மரண பயத்தைக் காட்டிய இச்சம்பவம் எளிதில் கடந்து செல்ல முடியாதது.

போதையில்லா தமிழகத்தை உருவாக்குவோம் என மேடையில் உறுதிமொழி எடுத்த முதல்வரே அவல ஆட்சியில், பெட்டிக்கடைகளில் கூட போதைப் பொருட்கள் சரளமாகக் கிடைக்கின்றன, அரசுப் பள்ளிகள், அரசு மருத்துவமனைகள், அரசு அலுவலகங்கள் என எங்கு பார்த்தாலும் குற்றவாளிகள் போதையில் சுதந்திரமாகச் சுற்றித் திரிகின்றனர். போதையின் வீரியத்தில் பார்ப்போர் மீதெல்லாம் தாக்குதல் தொடுப்பது தமிழகத்தில் வாடிக்கையாகிவிட்டது, சீரழிந்து கிடக்கும் சட்டம் ஒழுங்கால் போதையில் ரகளை செய்பவர்களைக் கண்டிப்பதற்கு கூட பொதுமக்கள் அஞ்சுகின்றனர்.

ஆனால், இதையெல்லாம் மூடி மறைத்துவிட்டு தமிழகத்தில் போதை நடமாட்டமே இல்லை என வாய்கூசாமல் விளம்பரப்படுத்திக் கொண்டிருக்கும் திமுகவினரைக் கண்டாலே கடும் கோபம் தான் எழுகிறது. இவர்களைப் போன்ற நாடகக்காரர்களின் கரங்களில் இனி தப்பித்தவறி கூட அதிகாரம் கிடைத்து விடக் கூடாது" இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

Published by R.S ROSHINE Printed by **R.S. ROSHINE** On behalf of R.S. ROSHINE Printed at J.M. Process, No 29, V.N. Doss Road, BorderThottam, Mount Road, Chennai – 600002.
and Published From NO. 42/62, Buchammal Street, 1st Floor, New Washermenpet, Tondiarpet, Chennai, Tamilnadu – 600081. Editor: **R.S.ROSHINE, PH: 8122836299, e-mail: paperboynewspaper@gmail.com**